KALANILAYAM

தனிப்பிரதி விலை அணா மூன்று.

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 8 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol. 6] 1933 ஹு ஜனவரி மீ 5உ [No. 1

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 1
2. தமிழ்ப்பாடம்
(களவெண்பா - கலிங்கத்துப்பரணி...) 3
3. தேவகி (ஓர் நாவல்)
K. இராஜகோபாலன் 5
4. கம்பராமாயணம் (மாரீசன் வதைப்படலம்)
T. N. சேஷாசலம் B.A. B.L. 6
5. வாழி தோழி (ஓர் சார் நாடகம்)
P. இராமாநுஜன் 8
6. கலித்தொகை (முன்னுரை - கடவுள் வாழ்த்து) T. A. கனகசபாபதி முதலியார் 10
7. யாப்பிலக்கணம் (அசை - சீர்)
வித்துவான் M. V. வேணுகோபாலப்பிள்ளை 1
8. காற்று மழை (முன்னுரை - அங்கம் 1. களம் 1)
(Shakespeare's Tempest) 15
9. நம்மாழ்வார் வைபவம் (4 பத்து-4 தசகம்)
K. இராஜகோபாலாசாரியார் B.A.B.L. 1
10. அப்பர் (64 கலைகள்—வியாகரணம்)
E. N. தணிகாசல முதலியார் B.A.B.L. 17
11. வர்த்தமானம் 1

கலாநிலயம்

கந்தன் அருளோடு செந்தமிழ்ச் செல்வமும் வாய்ந்த எமது நண்பர் நவாலி திரு. க. சோமசுந்தரம் பிள்ளையவர்கள் அன்புகூர்ந்து பாடித்தந்த இப் பாசுரத்தால் நாமாலை நனிவழுத்தி நம் கலாநிலயம் தன் ஆறாவது ஆண்டினை இனிது எய்துகின்றது—

வாக்கிலே மெய்ம்மையா யின்சொலின்
வடிவமாய் வாள்விழியிலே யொளியதாய்
வடிவிலே திருவாகி யிருசெவியி
லழியாத மறைமுதற் கேள்வியமுதாய்
ஊக்கமிகு மனத்திலே யாசையில்
லாமைமுத லோதநற் குணவடிவமாய்
உரையிலே பொருளாகி யதனிலே
சுவையாகி யுவையிலே யின்பமாகி
மூக்கிலே மணமாகி யூற்றிலே
யினிதாகி முன்னறிவின் மூதறிவுமாய்
மூலத்தில் வாக்காகி யொலியாகி
ஒலிதோன்று மூலகா ரணமுமாகி
நாக்கிலே பாவாகி முடிவிலே
யழியாத நவநிதிய மாகிநின்ற
நற்றமிழ்த் தெய்வமே யறியாத
சிறியேனை நன்னெறி நடத்தியருளே.

ஆம். கலைமகளல்லால் நம்மை நன்னெறி நடத்தியருளயாரே உளர்? நமது உடலிற்குச் சுத்தமும் சுகமும் அழகுஞ் செய்யும்பொருட்டு எத்தனை காரியங்கள் முயல்கின்றோம்? காலையும் மாலையுங் குளிக்கின்றோம்; பசித்ததோ இல்லையோ என்னுமுன் உணவு நாடிச் செல்கின்றோம்; வலித்ததோ இல்லையோ என்னுமுன் வைத்தியமும் மருந்துந் தேடுகின்றோம்; கடன் பட்டேனும் ஆடையும் ஆபரணங்களும் அணிகின்றோம். இவைகளன்றி, நம்மைக் கண்டு பிறர் வியக்க வேண்டுமென்று படுகின்ற பாடு கொஞ்சமன்று.

மற்று, ஆன்மா ஒன்று இருக்கின்றதே; அதன் சுத்தத்திற்கும் சுகத்திற்கும் அழகிற்கும் நாம் என்ன செய்கின்றோம்? ஏதேனுஞ் செய்யத்தான் வேண்டுமென்று நினைக்கவேனும் நினைக்கின்றோமோ. அல்லது நினைக்கக் கூடும் என்பதேனும் தெரிந்திருப்பவர் எத்தனை பேர். கெட்ட எண்ணங்கள் எழுகின்றனவே; இவைகளெல்லாம் நம் ஆன்மாவை அசுத்தப் படுத்துவதில்லையா? கையிலே காலிலே அழுக்குப் பட்டால் உடனே அதனைக்கழுவ விரைகின்றோம், காமக் குரோதாதிகளில் அழுகுகின்ற தீய எண்ணங்களாகிய அழுக்கு நமது ஆன்மாவை நிமிடந்தோறும் அசுத்தப் படுத்தக் கண்டிருந்தும் அதனைக் கழுவுதற்கு நாம் ஏன் முயலாமல் இருக்கின்றோம்! ஆன்மாவிற்குப் பசிப்பதில்லையென்று எண்ணுகின்றீர்? தத்துவ அமுதினை அள்ளிப் பருகவேண்டும் என்னும் பசியினால் உழலாத ஆன்மா ஓரிடத்தும் இல்லை. தன் பசியை அது மிகவும் மெல்லிய குரலால் தெரிவிக்கின்றது. வயிற்றுப்பசியின் கதறலைக் கேட்டுக் கேட்டுச் செவிடு பட்டிருக்கும் மாநுடச்செவிகளுக்கு ஆன்மாவின் அம் மெல்லியகுரல் எட்டுவது அருமையாய்க் கிடக்கின்றது. அவ்வளவே, ஆன்மாவிற்கும் அழகு மிகச் செய்ய உவகையுடன் பார்த்தல் கூடும். தன் குறையை நினையாமல் பிறர் குறைபாடுகளைக் களையக்கருதி எழுகின்ற நல்லெண்ணப் பொன்னுடையால் புனைந்து கொள்வதற்கு ஆன்மா எவ்வளவோ ஆசைப்படுகின்றது.

கண்ணோட்டமென்னும் மணிமுடியால் ஆன்மாவின் சிரம் பெரிது அலங்கரிக்கப் பெறும். பிறர் தம்மைக் கண்டு வியக்கவேண்டுமென்று மனிதர் அவாவுகின்றனர் என்றால், ஆன்மாவானது தன்னையே தான் கண்டு வியக்கும்படி அமைவதற்கு எவ்வளவோ விழைகின்றது. எனினும், உடலுக்கு வேண்டியவைகளை யெல்லாம் உழைத்துத்தருகின்ற மாந்தர் ஏனோ தம் ஆன்மாவிற்கு வேண்டியவைகளை எள்ளளவும் ஈயாமல் உலோபம் செய்கின்றனர்.

இன்னுமொன்று. இவ்வுடலோ அழிவதுநிச்சயம். அதனைப்பற்றி ஒருவருக்கும் ஒருவித ஐயமும் இல்லை. ஆயினும், அதன் சுத்தம் சுகம் அழகாதிகளுக்கு அவத்தைப்படுகின்றனர். ஆன்மாவோ—அதன் இருக்கை தன்மை முதலியவைகளை அறிவது அருமையாயினும், ஆன்மா அழிவதை, ஒருவருங் கண்டதில்லை. உடல் இருக்கின்றது; மற்று அது அழியும் என்பதோ ஐயமற நிற்கின்ற நிச்சயம். ஆன்மா என்ற வொன்று நமக்கு அயலாய் உள்ளதோ இல்லையோ என்னும் வாதம் எவ்வகைத்தாயினும், அது இருப்பது உண்மையாயின் அழிவதுவோ ஒரு நாளும் இல்லை என்பது நிச்சயமல்லவா. அவ்வாறாக நிச்சயமாய் அழிகின்ற இவ் வுடலைப்பற்றி இத்துணைப் பாடுபடுவதனினும், அழிவு வரையிலேனும் இல்லையெனும் நிச்சயத்திற்கு இலக்காகிய ஆன்மாவின் சுத்தத்திற்கும் அழகிற்கும் தன்னையேதான் வியக்கின்ற நன்மைக்கும் முயல்வது மதியுடைய செய்கையாகுமே. ஆன்மா இருக்கலாம் அல்லது இல்லாமலிருக்கலாம்; இதனை நிச்சயமாய் ஒருவராலும் அறியமுடியாது என்றே வைத்துக்கொள்வோம். ஒருகால் அது இருக்குமாயின், அவ்வான்மா உடலைப்போல், அழிந்தொழிய ஒருவருங் கண்டதில்லை ஆகையால், அது அழியாமல் நிரந்தரமாயிருப்பதெனக் கொள்ளல் தகும். எனின், அதன் தூய்மையை, அதன் பசியை, அதன் அழகை நாடி ஒன்றுஞ் செய்யாமல் சும்மா கடந்துவிடல் மனிதருக்குத் தகவன்று.

ஆன்மசுத்திக்கும் ஆன்ம ஆசைக்கும் ஆன்ம அழகிற்கும் என்ன செய்யவேண்டும் என்பது மிகப்பழைய கேள்வி. ஈசுவரனை நாடிச் செல்வதே இவைகளுக்குரிய செயல் என்று எஞ்ஞான்றும் எவ்விடத்தும் சான்றோர் விடை கூறியிருக்கின்றனர். சென்னைமா நகரில் தற்காலம் விஜயம் செய்திருக்கின்ற, ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள், மாலைதோறும் நூற்றெட்டு முறை ஒருவன் இராமநாமத்தை ஜபிப்பானாயின், ஆன்மாவிற் படிந்திருந்த அழுக்குக்கள் அகன்றுவிடும் என்று சென்றவாரம் ஓர் உபந்நியாசத்தில் கூறியருளினர். அம் மந்திரத்தின் பெருமையையும் இவ் வுபதேசத்தின் உண்மையையும் மெய்யுணர்வுடையோர் ஒருவரும் அவிக்கமாட்டார். எனினும், பஞ்சாக்ஷர ஷடாக்ஷர அஷ்டாக்ஷர மந்திரங்களுக்கும், அவைகள் மூலமாய் அவ்வெழுத்துக்களின் இறையாய பரம்பொருளிடத்தும் நம்மை உய்த்துச்செல்ல, உரைகளையன்றி வேறோர் உதவி வேண்டுமே. அவ்வுதவியைச் செய்ய வல்லது கலையுணர்வு பொலிகின்ற காவியப்பயிற்சியே என்னும் துணிவினை முன்வைத்து முயல்கின்றது இக் கலாநிலயம். எனின், நமக்கோர் கைகாட்டி அந்நன்னெறி நடத்தியருளும்பொருட்டே புலவர்பெருமக்கள்தம் நாமிசை நடமாடும் மயிலனைய கலைமகளை என்றும்போல் இன்றும் வணங்குவாம். வணங்கிய மனத்தராய் வாசிப்போமெனின், இவ்வாண்டின்கண் இவ்விதழ்களூடு தவழ்ந்துவரும், நளவெண்பாவும், கலித்தொகையும், கார்நாற்பதும், கம்பராமாயணமும், காற்றுமழையும் இவையனைய பிற நூல்களும், மக்களை, ஆன்மாவானது சுத்தமும் சுகமும் அழகும் அடைதற்குரிய நெறிக்கண் பரிவுடன் அழைத்தேகும் தன்மை வாய்ந்தனவாம். அந்நெறியும் நெடிதன்று, இருமருங்கும் இன்பம் கொழிக்கின்ற நலத்தது, குறிக்கொண்ட எல்லைச் சென்று சேர்வதும் நிச்சயம். இவ்வான்மவே வேண்டும். மற்றவெல்லாம் கொள்ளக்கொள்ள நாம் குறைகின்றோமல்லது நிறைவடைவதென்பது ஒருநாளுமில்லை இவ் வான்மநிலைக்கு நாம் தகுந்தவர்களாவோமெனின், சீர்திருந்தவேண்டியது வேறொன்றுமில்லை; அரசியலில் வாதிப்பதற்கு அணுவளவுமில்லை. ஆன்மநிலை அடைந்தவரல்லோமாயின், வேறு சிலவற்றால் நாம் அடையக்கூடியது தீதொழிய நன்மையில்லை. எந்த முறை எப்படித் திருந்தினாலென்ன, திருந்தாமற் கிடந்தாலென்ன! ஆந்திரகவி வேமனார் விளம்பிய வண்ணம், "ஆத்ம சுத்தி லேனி ஆசார ம... யேல?"

நலமுறப்பெறுமொரு முன்னேற்றம் நாளை யடைய வேண்டுமென்று பொருளில்லாவொன்றைப் பலபடி முழங்கி இற்றைப்பொழுதை வீணே விற்றுவிட வேண்டா. இக்காலம் முன்னேற்றங்களென்று முயலப்படுவனவெல்லாம், ஆன்மா இல்லாதவொரு பாழிற்கே படிப்படியாய்க் கால்வைத் தேறுகின்ற கதையாய் முடிவதைக் கண்டுவருகின்றோம். ஆன்மநிலையால் நிறையாத வாழ்க்கையின் வயிற்றில் யானைத்தீ பற்றி எரியும். வையமெல்லாம் பெய்தாலும் இதனைத் தணிக்க இயலாது. பண்டொர்நாள் பார்த்தனுக்குப் பகவான் பகர்ந்தமொழி யிதுவே; இன்று நாம் நமது அனுபவங்களுக்கிடையே காண்பதுவும் இதுவே.

ஆன்மநிலை என்றக்கால் எல்லாவற்றையும் விட்டுவிட்டு அடவிக்குத் துறவியாய்ச் செல்வதே பொருளெனச் சிலர் சிந்தித்திருக்கின்றனர். இதனைப்பற்றி நாமிங்குப் பகரவில்லை. ஒருவன் உலகினிடை உவந்திருந்து விவகரித்தவண்ணமே அனைத்தையும் தன்னுள் ஒருங்கே அடங்கக்கொள்ளும் ஆண்மையே ஆன்மநிலையின் அரிய தத்துவம். உவகை இதன் அறிகுறி உண்மையில் உயர்ந்தவைகளை உட்கொண்டு உவக்கப் பயில்வது அதற்குரிய சாதனமும் ஆகும். எனின், வசையிலா உவகையை வழங்கவல்ல மாட்சிமை கலைகளுக்கே உளது. ஏனெனில், கலையின் உருவாய காவியங்கள் அனையவைகளுடன் பயிலும்பொழுது, இலாபநஷ்டக் கணக்கில் ஒன்றும் கண்வைப்பதின்றியே நம் முழுமையையும் அதன்பால் துறப்பவர்போல் தோன்றி அதனால் வரும் உவகையனைத்தையும் நம்முடையதாக்கிக்கொள்கின்றோம். ஆன்மா அமைதி அடைகின்றது; உலகின் அல்லல்களுக்கிடையே ஓர் அமைதி காண்கின்றது. ஒருகால் தன்னுடைய ஆன்ம அமைதிக்கிடையே ஒரு சிறு அல்லல் காண நேரினும் நேரலாம் ஆன்மநிலைக்குரிய இவ் வல்லல் தன்னைப் பற்றியதாயிருக்காது. மற்றவர்களைப் பற்றியதா யிருக்கும் தானடைந்த ஒரு தனிநிலையை மற்றவர்கள் அடையநினையாமல் வீணே உழல்வதைக் கண்டு வருந்துவார் மேலோர். மற்றவர்களும் அந்நிலை யடைவதற்கு என்ன செய்யலாம் என்று ஏங்குவார். யாருக்கும் ஒருவாறு அல்லல் உளது. ஆங்கில கவி, தாமஸ் க்ரே (Thomas Gray) என்பவர்

To each his sufferings:—all are men;
Condemn'd alike to groan—
The tender for another's pain
The unfeeling for his own.

எனப் பரிவுடன் எடுத்துரைக்கும் வண்ணம், தனக்கென்று அல்லலுறாமல் பிறர்பொருட்டு அடையும் தெய்விக அல்லலுக்கு ஆளாக நேர்வதே ஆன்மநிலை வளர்ச்சியின் அறிகுறி எனக் கொள்ளலாம். இந்தக் குறி காணுமாறு பயிற்றுவிக்கின்ற கலைப்பொருள்களை அறிமுகம் செய்விப்பதன்றி நம் கலாநிலயத்திற்கு வேறோர் தொழிலில்லை என்பதைச் செப்பவும் வேண்டுமோ?

மலேயா இலங்கை முதலிய இடங்களில் இருக்கும் நம் நண்பர்கள் உடனே தம் சந்தாக்களை மணியார்டர் செய்து உதவும்படி வேண்டப்படுகின்றனர். அவ்விடங்களுக்கு வி.பி. அனுப்ப இயல்வதில்லை.

மானேஜர்

8392

தமிழ்ப் பாடம் 51.

[5-வது வால்யூம் 987-வது பக்கத்தொடர்ச்சி]

நள வெண்பா—கலி நீங்கு காண்டம்

மூலப் பழமறைக்கு முன்னேயுங் காணலாம்
காலிக்குப் பின்னேயுங் காணலாம்—மால்யானை
முந்தருளும் வேத முதலே யெனவழைப்ப
வந்தருளுஞ் செந்தா மரை. 1.

பதப்பிரிவு:—மூலம் பழ மறைக்கு முன்னேயும் காணல் ஆம் காலிக்கு பின்னேயும் காணல் ஆம் மால் யானை முந்து அருளும் வேதம்முதலே என அழைப்ப வந்து அருளும் செம் தாமரை.

அன்வயம்:—'முந்து அருளும் வேதமுதலே,' என மால்யானை அழைப்ப, வந்து அருளும் செம்தாமரை, மூலப் பழமறைக்கு முன்னேயும் காணல் ஆம், காலிக்குப் பின்னேயும் காணல் ஆம்.

பதவுரை.

'முந்து - முதலில் (பிரம்மனுக்கு)
அருளும் - உபதேசித்து அருளிய
வேதம் - வேதங்களாற் குறிக்கப்படுகின்ற
முதலே - முதற் பரம் பொருளே'
என - என்று
மால் - மதமயக்கங் கொண்ட
யானை - யானையாகிய கஜேந்திரன்
அழைப்ப - அழைத்தவுடன்
வந்து - வந்து
அருளும் - அருள்செய்த
செம் - சிவந்த
தாமரை - தாமரை மலர்போன்ற திருவடிகளை,
மூலம் - முதலாகிய
பழ - பழைய
மறைக்கு - வேதங்களுக்கு
முன்னேயும்-(அகப்படாமல்) முன்னே செல்லவும்
காணல் ஆம் - காணலாகும்;
(அப்படி வேதங்களுக்கு எட்டாப் பாதங்கள்)
காலிக்கு - பசுக் கூட்டங்களுக்கு
பின்னேயும் - பின்னால் தொடர்ந்து செல்லவும்
காணல் ஆம்-(கிருஷ்ணவதாரத்தில்) காணக்கூடும்.

விளக்கம்:—(மாந்தர்களாகிய நாம்) காணல் ஆம்-காணக்கூடும். எதனைக் காணல் ஆம்? தாமரை-தாமரை மலர்போன்ற பாதங்களை. எப்படிப்பட்ட தாமரைமலர் போன்ற பாதங்களைக் காணலம்? செம்தாமரை-சிவந்த தாமரைமலர்போன்ற பாதங்களை. என்ன செய்த செந் தாமரை மலர் போன்ற பாதங்களைக் காணலாம். அருளும் செம்தாமரை காணலாம்.—அருள்செய்த செம் தாமரை மலர் போன்ற பாதங்களை நாம் காணலாம். என்ன செய்து அருளும்? வந்து அருளும் - எதிரே வந்து அருள்செய்த. எப்பொழுது வந்து அருளும் செம் தாமரையைக் காணலாம்? அழைப்ப—அழைத்த வுடன் வந்து அருள்செய்த செந்தாமரை போன்ற பாதங்களைக் காணலாம்.

எது அழைத்தவுடன் வந்து அருளும் செம்தாமரையைக் காணலாம்? யானை-கஜேந்திரன் என்னும் யானை. அது எப்படிப்பட்ட யானை? மால் யானை - மத மயக்கம் கொண்ட யானை. அந்த மால் யானை எப்படி அழைப்ப? என அழைப்ப-என்று கூப்பிட்டு அழைத் தவுடன். என்னவென்று மால்யானை கூப்பிட்டு அழைத்தவுடன் வந்து அருள்செய்த செந்தாமரை போன்ற பாதங்களைக் காணலாம்? முதலே என அழைப்ப - முதற் பரம்பொருளே என்று அவ்யானை அழைத்த வுடன். எந்த முதலே என மால் யானை அழைப்ப? வேதமுதலே என அழைப்ப-வேதங்களால் குறிக்கப் பட்ட முதற்பரம்பொருளே என்று அழைத்தவுடன் அந்த வேதம் எப்படிப்பட்டது? அருளும் வேதம் - பிரம்மனுக்கு உபதேசித்தருளிய வேதம். எப்பொழுது அருளும் வேதம்? முந்து அருளும் வேதம் - முதலில் பிரம்மனுக்கு உபதேசித்தருளிய வேதம்.

முந்து அருளும் வேத முதலே என மால் யானை அழைப்ப வந்து அருளும் செந்தாமரையை எங்கே காணலாம்—முதலிலே பிரம்மனுக்கு உபதேசித்தருளிய வேதங்கள் குறிக்கின்ற முதற்பரம் பொரு[illegible] என்று மதமயக்கங் கொண்ட கஜேந்திரன் என்னும் யானை அழைத்தவுடன் வந்து அருள் செய்த செந்தா மரைபோன்ற பாதங்களை எங்கே காணலாம்? மு[illegible] னேயும் காணலாம் - முன் இடத்திலேயும் கா[illegible] எதற்கு முன்னேயும் காணலாம்? மறைக்கு முன் னேயும் காணலாம்—வேதங்களுக்கு முன்னே முன் னே செல்லவும் காணலாம். எப்படிப்பட்ட மறைக்கு முன்னேயும் காணலாம்? மூலப் பழமறைக்கு முன் னேயும் காணலாம் - எல்லாவற்றிற்கும் முதலும் பழையதும் ஆகிய வேதங்களுக்கு முன்னாலேயும் காணலாம்.

மூலப் பழமறைக்கு முன்னே காணலாகின்ற செந் தாமரைபோன்ற பாதங்களை வேறு எங்கேயும் காண லாம்? பின்னேயும் காணலாம் - பின்னால் தொடர்ந்து செல்லவும் காணலாம். எதற்குப் பின்னே காணலாம்? காலிக்குப் பின்னேயும் காணலாம் - பசுக் கூட்டங்க ளுக்குப் பின்னாலேயும் காணலாம்.

விரிவுரை:—இந்தக் காண்டத்திற்குப் பாயிரமாகப் பாடிய கடவுள்வணக்கச்செய்யுள் [illegible] ஸ்ரீமந் நாராய ணன் உயிர்களை அளிக்கின்ற தி[illegible]தப் புகழேந்திப் புலவர் இங்கு மிகவும் அழகாக[illegible]ட்டியிருக்கின் றார். பிறவியெடுத்த வொருவன் சம்சாரமாகிய மடு வில் இறங்கித் தன்னுடைய ஆசையாகிய தாகத்தைத் தீர்த்துக்கொண்டு கரையேறிவிடலாம் என்று எண் ணுகின்றான். அப்பொழுது அவனுடைய மெய் வாய் கண் மூக்குச் செவிகளாகிய ஐந்து இந்திரியங்களும் அவனை இறுகப்பற்றிக்கொண்டு, ஆசைதீர்ந்ததென்று கரையேற விடாமல் முதலைகளைப்போல் அவனை ஆழ ஆழ முழுக்கிக்கொண்டு போகின்றன. முதலில் இந்த ஆபத்து நேர்கின்றதென்பதை அவன் தெரிந்துகொள் ளாமல் சுகமாயிருப்பவைகளை அனுபவிப்பதிலேயே மகிழ்ந்திருக்கின்றான். முதலையோ தன்னைக்கழுத்தளவு முழுக்கும் வரையில் கஜேந்திரன் ஒன்றும் பயப்பட வில்லை. "இது என்ன, ஒ[illegible]ந்துதானே, நீரைப் பருகியபின் இதனை உத[illegible]ட்டால் போகின்றது," என்று எண்ணியிருந்தது அந்தயானை. அவ்விதமேஇந் திரியங்கள்பற்றியிழுப்பதால் சிறிதுதுன்பம் தோன்றி னாலும் சம்சாரத்தால் கிடைக்கின்ற இன்பங்களை[illegible] லாம் அனுபவிக்கக்கூடிய வரையில் அனுபவித்துவிட டேப்[illegible]கு இந்த இந்திரியங்களையெல்லாம் தங்கள் சா

மைக்குக் காரணம் நம் நாட்டில் வளர்ந்துவரும் பத்திரிகைகளே. மக்கள் பெருமையும் மடவார் உரிமையும் பெறுவதெல்லாம் பத்திரிகைகளின் முயற்சியால்....'' என்று என் மாமி வாசகத்தை முடிக்குமுன் ஜனநலத் தொண்டர் மனைவி, "...முயற்சியாற்றான் என்பதை மற[illegible]பவர் இல்லை எனினும், அம்ம, நன்மையொடு தீமை[illegible]ம் புரிகின்றதே'' என்று துவக்கி மேலே தொடரச் சிந்திப்பாள்போலிருக்க, என் மாமி, "சுயநலத்தார் கூட்டுறவால் தீமைகள் பலபல இடைப்புகுகின்றன. எனினும், நன்மையே அதிகமாதலால் வருந்துவதற் கொன்றுமில்லை. ஆகாயத்திலே மாந்தர் பறப்பது கதையாய் அமையாமல் நாம் கண்களால் காணநேர்வதும் பத்திரிகை வளர்ச்சியாலாயிற்றென்பதை நினைக்குங்கால் நாம் கடிவதற்கு என்ன இருக்கின்றது! இன்பத்தைத் துன்பமும், பகலை இரவும், தொடர்வதுபோல் நன்மையைத் தீமையும் தொடராமல் தீராது. விஞ்சுவது நன்மையோ தீமையோ என்பதொன்றையே நாம் கருதல்வேண்டும்'' என்று மழையெனப் பொழிந்தாள்.

இதுகேட்ட மற்றவள், "முகஸ்துதி என்றுமேலா, அம்மா அன்று. உங்கள் வாயின்பெருகும், வளமுடை மொழிகேட்டு வியக்கின்றேன். ஆண்டுகள் பலகற்றலும் கேட்டலும், பலவாண்டு வாதப்பயிற்சியும், பிரசங்கப் ப[illegible]க்கமுந்தான் சொற்பெருக்காற்றல் தரும் என்பர். உங்கள்பால் இது வெற்றுரையே யாயிற்று. விஷயத்தைத் தெளிவுடன் அளவிற் குறைந்த சொற்கொண்டு விளக்குபவர் உங்கள் திறம் கண்டிலேன். மதியின் வளம் பெற்றார்க்குப் பயிற்சியும் பழக்கமும் எற்றுக்கு. தீயன ஒழித்து நல்லன ஏற்பது மதியே. எனினும் அம்மா, நல்லார் துணைகொண்டு, ஜனநலமே நோக்கமாக ந[illegible]நிலைநின்று உழைக்கும் ஒருபத்திரிகை இருக்குமாயின்........'' என்னுமளவில்,

"இருக்குமாயின் நலந்தான். இருக்குமேல் என்று நைவதினும் இருப்பனகொண்டு தீமைகளை விலக்க முயலல் மதியுடைமை'' என்று என் மாமி தன் சுடுமுகம் மலர்தர உரைத்தாள்.

"அம்ம, அற்பர்களும், நேற்று முளைத்த வெற்றுரையாளர்களும் வர்த்தமானப் பத்திரிகைக் காட்டிடையே செழிக்கின்ற[illegible] அவர்கள் விடுகின்றமூச்சு அச்சேறிவிடுகின்றது. [illegible]றுப வாசம் நாம் நடத்திய மாதர் நலக் கூட்டத்[illegible] சிறியதோ. உங்கள் தலைமை உரைதான் சிறப்பற்றதோ ? நம் குடந்தைநகர்ப் பத்திரிகை நிருபருக்கு நாம் கொடுத்திருப்பது கொஞ்சமோ ! நம் நாட்டின் விதியிது. ஓரடி முன்சென்றால் இரண்டடி பின் சறுக்குகின்றது. என் கணவரிடம் சிறிது பொருளிருப்பின்.........'' என்று சேகரனார் மனைவி உரைத்து வருகையில்,

"பணம் இருந்தால் போதுமா? மனிதத் துணையும், பலர் கூட்டுறவும், சுயநலமின்மையும் வேண்டப்படுவன. சிறிதுசிறிதாகத்தான் முயலவேண்டும்.'' என்றனள் என் மாமி. "உண்மையே உரைத்தீர். அம்மா, சிறிதுசிறிதாக முயலத்தான் யாரேனும் ஒருவர் முற்படவேண்டாவோ. நமதுநாட்டின் ஆட்சிமுறையும் இனிப் பொது ஜனப்பொறுப்புடையதாகப்போகின்றது. இந்நிலையில் பெரியோர் பலர் முன்வரவேண்டும். உங்கள் கணவர் போன்றவர் ஏனோ தூங்குகின்றனர். தூங்கவோ நாம்பிறந்தோம். பகவத்கீதைபோதிக்கின்ற கர்மயோகம் பிறர்நலம் பேணுதலால் நிறைவேறுகின்றது. ஆன்மாவென்றும் கடவுளென்றும் வாய் சொல்ல, தம் நலமே நாடினராய் உண்டுறங்கி வாழ்வது வாழ்க்கையின் பயனோ சொல்வீர். தொன்மை மரபென்றும் மூதாதையர் நெறியென்றும், விண்ணையும் ஆட்சிகொண்ட சாத்திரங்கள் வளர்ந்துள்ள இக்காளிலும், மாந்தர் சொல்வாரெனின், அவர் மதியை என்னென்பது. 'ஆள்பவன் இராமனாயிருந்தாலென், இராவணனாய் இருந்தாலென்' என்று உங்கள் கணவர் சொல்வதைக் கேட்டுள்ளேன். இப்படிச் சொல்லிச் சொல்லித்தான் நாம் இந்நிலைக்குவந்தோம். இனியும் இம்மந்திரம்' ஓதுவார் பலர் இருப்பது யார்செய்த பாவமோ அல்லது நம்மையாள்வோர் செய்தநல்வினையேதானோ, நானறியேன்.'' என்று உரை சொரிந்த அந்தச் சேகரனார் மனைவி மூச்சுவிட ஓய்ந்தாள். ஓய்ந்தவள் சிறிது களைத்துவிட்டு மீண்டும், 'அம்ம, கடவுள் உங்கள்பால் ஒன்றும் உலோபம் செய்யாமல் இம்மைக்குரியவெல்லாம் கொடுத்திருக்கின்றார். தந்தவற்றைப் பயன்படுத்திக்கொள்ளாமற்போவது மதியுடைமையாகாது. பொருளொடு கல்விநலமும் பெற்றிருக்கும் உங்கள் புருஷர் வாயைத் திறப்பாரேல் போதும். பிறகு, திரிந்துவரும் நம் பொறுப்பாட்சிமுறையில் அவர் மந்திரி ஆவதும் எளியதொன்றே.'' என்று உரைசொரிந்து ஓய்ந்தாள் ஜனநலம் பேணு மார்வத்தாள்.

சுயநலமில்லா இவ்வாசகம் என் மாமியைக் கவர்ந்துவிட்டது. திறந்தவாய் மூடாமற் கேட்டவள், "பலவாண்டு பொது ஜன சேவையில் ஈடுபட்டவரும், சிறைசென்ற உரிமை உடையாரும் பலரிருக்க, உன் உரை, "முடவனுக்குக் கொம்புத் தேனைக் காட்டுவதுபோன்றன்றோ இருக்கின்றது'' என்று முடிக்குமுன், பிறர் நலம் நாடும் சேகரனார் நன்மனைவி "உங்கள் கணவர் முடவருமல்லர், பொருளுண்டாயின் முடவனுக்கும் கொம்புத்தேன் உண்டு. சிறையும், சிறைதரும் சிறுமையும் வேண்டவே வேண்டா. பொருளுடையார்க்கிவ்வுலகில் உண்டு உண்டு, எல்லாமுண்டு'' என்று அழுத்தமுடன் மொழிந்துவைத்தாள்.

கம்பராமாயணம்

ஆரணிய காண்டம்—7. மாரீசன் வதைப் படலம்.

[5-வது வால்யூம் 995-வது பக்கத் தொடர்ச்சி]

விதியே யல்லால் வேறொன் றுளதோ

சூர்ப்பணகை சொன்ன[illegible]வ்வளவுங் கேட்டான் இராவணன்; கற்பினுக் கணியாம் அச்சீதையின்பால் சீலமில்லாக் காமமுற்றச் சூழ்கின்ற சிந்தையன் ஆயினன். முடியுடைத் தலைகள் பத்தும் பிற்றைநாள் படியிடை அற்று வீழ்வதே இத் தகவிலாக் காமத்தின் விளைவாக நிற்கின்றது. மற்று, அந்தக் கேட்டின்பால் மூவுலகாளும் இச்சேவகனை முடுக்கியது மூக்கிழந்து வந்த அந்தத் தங்கையின் மொழியேதானே எனின், அன்று அன்று எனக் கம்பர் கழற விரைவாராகி,

விதியது வலியி னானு மேலுள விளைவி னானும்
பதியுறு கேடு வந்து குறுகிய பயத்தி னானும் .

கதியுறு பொறியின் வெய்ய காமநோய் கல்வி நோக்கா
மதியிலி மறையச்செய்த தீமைபோல் வளர்ந்த தன்றே.

[விதியின் வலிமையாலும், இனி நேர்வதற்கிருக்கின்ற காரியங்கள்பற்றியும், இலங்கைநகருக்குக் கேடுவரவேண்டியகாலம் நெருங்கிவிட்டபடியாலும், கல்லாத மடையன் ஒருவன மறைவாகசெய்த ஒரு தீமையானது வளர்ந்து எங்கெங்கும் பரவுவதுபோல், இராவணனது உள்ளத்தில்உண்டான காயநோயானது, அவனது வேகமுடைய பொறிகளின வழியாய் யாவருக்குந் தெரியும்படி வெளிப்பட்டு வளர்வதாயிற்று]

என்று புகலுகின்றனர். சழக்கியின் மொழிகளைச் சேர்க்காமல், விதியின் வலியினையே முதல்வைத்து, இராவணன் கொண்ட இக் கடுங் காமத்திற்குக் காரணங் காட்டிய கம்பர்தம் மேன்மையிது கருத்துமுற்றத் தோய்ந்து உணர்ந்துகொள்ளற்குரிய உயரிய உண்மைகளுள் ஒன்று. சீதையின் நலங்களைச் செப்பிய சூர்ப்பணகையின் கவிகள், உண்மையுணர்வினால் பிறக்கும் இயற்கைநயம் எய்தாமல், செயற்கை முயற்சியால் சேர்த்து மொழிகின்ற கிழ்நாத்தனவாய் நிகழ்ந்தமையால், அவை இராவணனது மனத்தினைக் காமத்தின்பால் கவர்ந்துகொள்ளக் காரணமா யிருந்தனவென்னும் சிறப்பை அவைகளுக்குக் கொடுப்பதின்றியே கம்பர் கழித்தனர் என்பது ஒருபுறம் பொருந்துவதுடன், மறுபுறம் இதனிற கண்டறிதற்குரிய மறைபொருள் இன்னுமொன் றுளது.

சூர்ப்பணகை இங்கு இராவணனது கேட்டிற்குக் காரணமாய் நிற்கின்றாள்போல் தோன்றுகின்ற தோற்றமெல்லாம், வெளித் தோற்றமே. சூர்ப்பணகையின் சொற்களைக் கேட்கவும், இராவணன் மனந்திரிந்து, தன்னை அயர்ந்ததோர் தன்மையெய்திக் கடிய காமத்திற் கிடந்தந்து அருங்கே டடைந்தானென்னல் வரலாற்று வரிசையில் இயம்புதற் கியன்றதேனும் சூர்ப்பணகையின் சொற்கள் தூரகாரணமாயேனும் உண்மையில் அமைந்தனவென்று நினைப்பது நேரிதன்று. அவை தாம் காரணம்போல் மேல்நோக்கிற்குத் தோன்றுவதோடு நின்றுவிடுகின்றனவாதலின், அதனை அறவே விடுத்து "விதியது வலியினாலும்" என்று துவக்குகின்றனர் கம்பர். ஆதலின், இராவணன் கெட்டானென்றால், அவன் விதியினால் கெட்டானன்றிச் சூர்ப்பணகையோ அவனை எவ்விதத்திலும் கெடுத்தவள் ஆகமாட்டாள். நம்முடைய வாழ்க்கை நிகழ்வதெல்லாம் இப்படியே "தீதும் நன்றும் பிறர்தர வாரா" என்றெடுத்து வற்புறுத்திய அக் கணியன் பூங்குன்றன் வாக்குப் பொய்யன்று. ஆருயிர் அதனதன் ஊழின் வழியோ அல்லது இறைவன்றன் எண்ணத்தின் வண்ணமோ படுமல்லது, பிறர் முயன்றவோர் சூழ்ச்சியால் தன்னிலை திரிந்து தீதெய்துமென்று நினைப்பதனினும் பேதைமை பிறிதில்லை. ஆதலாற்றான், மூக்கிழந்த தங்கையின் நாக்கின்வழி இராவணன் அழியலுற்றான் என மெய்யுணர்வுடைய நம் புலவர்பெருமான் புகலாதொழிந்தனர்.

உரைசூழ்ந் துறவுற மொழியும் ஆற்றலில் இச்சூர்ப்பணகையினும், கூனி என்னும் இடுபெயர் கொண்ட அம் மந்தரை பலபடி வல்லவள். தயரதன் கரியசெம்மலுக்கு முடிபுனை திருவிழா மறுநா ளென்றிருக்க, புறமேபோல் உள்ளமும் கோணிய இக்கொடியாள், அமளிமிசை அன்னமென மின்னலென அயர்ந்திருந்த கைகேசியைக் கால்வருடித் துயிலுணர்த்தி, "பேரிடர் இதோ நின்னைப்பற்றிவிழுங்குவான்படர்ந்துவருகின்றது" என்று அச்சுறுத்தியதற்குச்சிறிதும்அசையாமல் 'இராமனைப் பயந்த வெற்கு இடருண்டோ" என்று, அத்தேவி எதிர்மாற்றந் தந்தனள். இராமனைத்தன்மகனாய்த் தழுவிக்கொண்டதேபோல், "பன்னரும்பெரும் புகழ்ப் பரதனையே மைந்தனாய் உடைய கோசலைக்கு, இன்று இருப்பதனினும் இனியொரு புதியதோர் நலம் வருவதற்கு யாதுளது" என மறுத்து வியப்பாளாகி, தான் பயந்த பரதனைக் கோசலைக்கு மைந்தனாகப் பரிமாறுமொரு செம்மனத்துடன் சிறந்து விளங்கினாள் இவ்வுத்தமி. இன்னாதோர் அன்பினள் இராகவனை அடவிபோக்குமாறு குறளைகள் கூறிக்கூறிக்கூனி குறித்தனள். இறுதியில், அவ்வாறே இராமபிரானை இருங்கானம் போக்குதற்குக் கைகேசியும் இசைந்தனள். ஆயினும், கூனிதானோ, கைகேசியின் மனத்தைக் கேடுறத் திரித்து, இராமனுக்கு இடுக்கண் விளைவதற்குக் காரணமா யிருந்தவள், எனவினவில், அவளல்லள் என்று கம்பர் அங்குக் காட்டினர். இராவணன் மனத்தில் இங்குப் பெண்ணாசை புகுந்தது போன்றே அங்குக் கைகேசியின் மனத்தில் மண்ணாசை புகுந்த பெற்றியை விளக்குங்கால்,

தீய மந்தரை யிவ்வுரை செப்பலுந் தேவி
தூய சிந்தையுந் திரிந்தது சூழ்ச்சியி னிமையோர்
மாயை யும்மவர் பெற்றுள வரமுண்மை யாலும்
ஆய வந்தண ரியற்றிய வருந்தவத் தாலும்

[கொடியவளாகிய மந்தரை இவ்வார்த்தைகளைச் சொல்லுதலும், தந்திரமுடைய தேவர்கள்செய்த மாயையினாலும், அவர்கள் முன்னே பெற்றிருந்தவரம் உண்மையாதலாலும், அந்தணர் ஆகியவர் செய்திருக்கின்ற அருமையானதவத்தினாலும், கைகேசியின் தூய சிந்தையும் மாறியது.]

என, தீய மந்தரை சில செப்பினாளாயினும், தூய தேவியின் சிந்தை திரிந்ததன் காரணங்கள் இமையோர் மாயை முதலிய வேறாம் என்பதைக் கடிது காட்டுகின்றார். மந்தரையின் சொல்லும் கைகேசி மனந்திரிதலும் நிகழ்ச்சி வரன்முறைகளே யல்லாமற் காரணகாரியத் தொடர்புநெறி யல்ல. அவ்வாறே அதற் கடுத்தசெய்யுளினும்,

அரக்கர் பாவமு மல்லவ ரியற்றிய வறமுந்
துரக்க நல்லருள் துறந்தனள் தூமொழி மடமான்
இரக்க மின்மையன் றோவின்றிவ் வுலகங்க ளிராமன்
பரக்குந் தொல்புக ழமுதினைப் பருகு கின்றதே.

[இராக்கதர் செய்திருந்த பாவங்களும், மற்றவர் புரிந்திருந்த அறங்களும், தூரத்தலால் தூயமொழிகளைப் பேசும் இளமைபொருந்திய மானைஒத்த கைகேசி தனக்குஇயற்கையாகிய அருளைத் துறந்துவிட்டனள். இந்தஇரக்கமற்ற தன்மையினாலன்றோ, இன்றைக்கும் இவ்வுலகங்கள் அனைத்தும் இராமனது பரந்த பழைய புகழாகிய அமிர்தத்தை அருந்தி இன்புற நேர்கின்றது.]

என, அரக்கர் புரிந்த பாவம் அல்லவர் இயற்றிய அறம் அனைய தோன்றாக் காரணங்கள் சிலவற்றால் அத் தூமொழி மடமான் நல்லருள் துறந்தனளல்லால், கூனியின் சொல்லால் அரசு கவருமொரு கள்வியாளல்லள் என்பதை மீண்டும் கம்பர் ஓர்ந்துரைப்பவராகின்றார்.

இன்னணம், தீதும் நன்றும் பிறர் தர வாரா வாரா, என்னுந் தத்துவத்தைக் குறித்து, கூறாமல் நம்மை அதன்பாற் செலுத்துகின்ற செவ்வியராய கம்பரும் புலவர்பெருமக்கள் புரியும் பேருதவியை அறி

ஒன்றுமே அறிபாதார். "கெடுத்தான் இவன் என்னைக் கெடுத்தான்" என்று காய்தலும், "கொடுத்தான் இவன் எனக்கொன்று கொடுத்தான்" என்று உவத்தலும் செய்து செய்து, மாறுதி நக்கவேண்டிய மனத்தின் ஒருதனி நடுநிலையை அலைத்தலைத்து அல்லல்மிகக் காணும் இவ்வுலகின் அவலந் தீர்வதற்கு, சூர்ப்பணகையால் இராவணனும், கூனியால் கைகேசியும் மனந் திரிந்தனர் என்னுமந் நிரந்தர உண்மையை மறவாமற் காக்கவல்ல பயிற்சியொன்றே போதாதோ! இதனை உணர்த்துதற்கு இராமகதையினைக் கழறுமளவினேடு நிற்றலிற் பயனில்லை; வான்மீகி முனிவர் அவ்வாறு நின்றவராதலின்,

"இவ்விதமாகத் தீமையை நன்மையென்று போதித்த மந்தரையின் சொல்லைக் கேட்டு, கைகேயி, வெகு சந்தோஷமும் ஆச்சரியமும் அடைந்து, தப்பானவழியிற் செல்லும் ஒரு பெண்குதிரையைப்போன்று தப்பானவழியிற் செல்பவளாய் மந்தரையைப் பார்த்து, "கூனி, நீ இவ்வளவு சாமர்த்திய முள்ளவள் என்பது எனக்கு இதுவரையில் தெரியாது. இவ்வளவு தூரம் என் க்ஷேமத்தை நீ எண்ணியிருப்பதும் எனக்குத் தெரியாது. இவ் வுலகத்திலுள்ள கூனிகளில் புத்தியால் நிச்சயித் தறியவல்ல உத்தமமான கூனி நீதான். எனது காரியத்தில் நீ ஒருத்திதான் எப்பொழுதும் நன்மையே தேடிக்கொண்டு இடைவிடாது கவலை கொண்டவளாக இருக்கின்றாய். நீ சொல்லாவிடின் இவ்விஷயம் என்னால் அறியமுடியாது"

என்று கூனியின் கொடிய சொற்களே கைகேசியின் மனத்தினைத் திரித்ததற்குக் காரணம்போல் முடித்து விட்டார். கூனுடைய அக் கொடியாளுக்கு அழகின் கோலம் அமையக்கண்டு மதிமுடிசூட்டுகின்ற கைகேயியின்பேதைமை ஒன்று மட்டுமே இங்குச் சிரித்தற்கிடநிற்கவில்லை. அப்படியே, இராவணனும், "சூர்ப்பணமாய் கை கூறிய மயிர்க்கூச் செறியும்படியான மொழியைக்கேட்டுத் தான் செய்யவேண்டிய காரியத்தை மந்திரிகளுடன் ஆராய்ந்து புறப்பட்டான்" என இவ்விடத்தும் அவ் வடநூன் முனிவர், சூர்ப்பணகையின் கூற்றையும் இராவணன் செய்கையையும் நேரே தொடர்த்திவிடுகின்றனர். புலமைசால் கம்பரோ, கலையுணர் வெனும் தூய தீயினில் அக்கதையினைப் புடமிட்டு, தோற்றங்களை நீக்கி, உணர்ந்துணர்ந்து சில மாந்தரேனும் உய்யுமாறு, வித்தகச் செம்பொனின் தத்துவக் கதிரொளி விளங்க வனைகின்றார். நாடுகளும் பல, மொழிகளும் பலப்பல; மற்றித் தமிழ்நாடன்றி யாதே பண்டு கம்பரைப் பெற்றது? இருந்தவம் இந்நாடு செய்ததில்லை யென யாரே செப்புவார்!

வாழி தோழி

[ஓர் கார் நாடகம்]

செந்தமிழ்த் தீங்தேன் நுகரச் செவியெனுஞ் சிறகு விசித்தலையும் நண்பர்காள், வம்மின்! கார்காலத்தகவயின் நிகழ்ந்த ஓர் சிறு செய்தியை நாடகவமைப்பிற் கூறிய அக்கீர்த்திமிக்க கூத்தனுர் சொல்லமுந்து சாலச்சுவைவாய்ந்துளது. 1800 ஆண்டுகட்குமுன்னர்ப் பிழிந்தெடுத்த அந் நறுந்தேன் இன்றும் தன் தீஞ்சுவைமாறுதிருத்தலின்எம்மொடுவந்துஉண்டுமகிழ்மின்.

அங்கம் 1. களம் 1.

[முல்லைநிலத்துஓர் சிற்றூரின்கண் மாளிகையில் மெல்லணையின்மீது ஓர் பெண்ணரசி வாடிய பூங்கொம்பெனச் சோர்ந்து படுத்திருக்கின்றாள். அவள் அருகே ஓர் பெண்ணினல்லாள் நின்று பின்வருமாறு மென்மொழிகள் நவின்று அவள் மனத்தை ஆற்ற முயல்கின்றாள்.]

தோழி:—

பொருகடல் வண்ணன் புனைமார்பிற் றார்போல்
திருவில் விலங்கூன்றித் தீம்பெயல் தாழ
வருது மெனமொழிந்தார் வாரார்கொல் வானங்
கருவிருந் தாலிக்கும் போழ்து.

[அன்னய், நீ இங்ஙனம் வருந்தல் மிக்க பேதைமையாகும். மீள்வேம் என்று நமது தலைவர் கூறிச்சென்றநாள் இதோ வந்துவிட்டது! நம்மையெல்லாம் ஆட்கொண்டருளும் அண்ணல் திருமாலின் அழகிய மார்பில் விளங்கும் பலநிறமுடைய மலர்மாலையைப்போல இந்திரவில் வானத்தே ஒளிர, மழைத்துளிகள் வீழ்தலையில் வருவேமென்று அன்றே அவர் குறித்துச்சென்ற அந்நாள் இதோ வந்துவிட்டது! மேகம் சூல்கொண்டு மழைபெய்யத் தொடங்கும் இப்பொழுது அவர் வாராமல் நிற்பாரோ?]

[மெல்லணையிற் படுத்திருந்த அத்தளிரியற்றையல், அவ்வுழையிற் சாய்ந்த வண்ணமே.]

தலைவி:-தோழி, மேகமா இங்ஙனம் துளிகளைச்சொரிகின்றது என நினைக்கின்றாய்? ஐயோ! இவை யென் கண்ணீர்த் துளிகளன்றோ? எனது உள்ளத்தைக் கொள்ளைகொண்டு சென்றவர் குறிப்பிட்டுப்போன காலம் வர இன்னும் எத்தனை நாட்கள் ஆகுமோ?

தோழி:—

கடுங்கதிர் நல்கூரக் கார்செல்வ மெய்த
நெடுங்காடு நேர்சினை யீனக்—கொடுங்குழாய்
இன்னே வருவர் நமரென் றெழில்வானம்
மின்னும் அவர்தூ துரைத்து.

[வளைந்த காதணியையுடையாய், கொடிய கதிர்களை வீசிக்கொண்டிருந்த பகலவன் இதோ பார், முகிற்கூட்டங்களினிடையேஇருந்தவிடம்தெரியாமல் மறைந்துவிட்டான். நீண்ட காடுகளில் உள்ள மரங்கள் எல்லாம் அழகிய பூங்கொம்புகளைப் பெற்றிருக்கின்றன; ஆதலின், இது கார்காலத் தொடக்கமே யாகும். அழகுமிக்க இக் கருமுகில் நமது தலைவர் விடுத்த தூதாகும்; நமது அன்பர் இப்பொழுதே வருவார் என்று வாய்திறந்து கூறுவதுபோல் அம்மேகம் மின்னுகின்றது பார்!]

தலைவி:—நங்காய், நீ கூறுவன அனைத்தும் வெறும் மயக்கமேயாகும்; மழைத்துளி யென்கின்றாய்; முகில் என்கின்றாய்; மின்னல் என்கின்றாய்; இவையெல்லாம் உண்மையேயாயின் நமது அன்பர் இதுகாறும் வாராதிருப்பரோ? ஆ! என்ன செய்வேன்? என் உள்ளம் ஒரு நிலையில் இல்லையே!

தோழி:—[தன் மனத்திற்குள்]

வரிநிறப் பாதிரி வாட வளிபோழ்ந்
தயிர்மணற் றண்புறவி னலி - புரள
உருமிடி வானம் இழிய வெழுமே
நெருந லொருத்தி திறத்து.

["வேனிற்காலத்திற்குரிய வரிநிறத்தையுடைய பாதிரிப் பூக்கள் எல்லாம் வாடிப்போயின; குறித்த கார்காலம் நேற்றே வந்தும் தலைவன் வாராமையால் தனித்திருந்து வருந்தும் தலைவியிடத்து இரக்கம்ஒருசிறிதும்இல்லாமல், காற்றினால் ஊடறுக்கப்பட்டு நுண்மணலையுடைய குளிர்ந்த காட்டின்கண் ஆலங்கட்டிகள் புரள, இடி இடிக்கும் மேகம் இன்னும் மழை பெய்ய எழுந்ததே! அந்தோ! என் தலைவி எங்ஙனம் உயிர் தரித்து வாழ்வள்" என்று வருந்தி மீண்டும் தலைவியைத் தேற்ற முயல்கின்றான்.]

ஆடு மகளிரின் மஞ்ஞை யணிகொளக்
காரீங் கடுக்கை கவினபெறப் பூசதன
பாடுவண் டூதம் பருவம் பணைத்தோளி
வாடும் பசலை மருந்து.

[மூங்கில் போன்ற தோளையுடையாய், என்ன! உன் மேனி இங்ஙனம் பசந்துவிட்டது!எனினும்; அது குறித்து நீ அஞ்சவேண்டா; மயில்கள் நாட்டியமகளிரைப் போலச் சிறகைவிரித்து அழகுற ஆடுகின்றன; கொன்றைமரங்கள் நிறைய அழகிய பூக்கள் மலர்ந்தனவாகலின் காடுகளும் அழகுடன் மிகப்பொலிகின்றன; அந்தப் பூக்களில் வண்டுகள் இன்னிசைபாடி ஊதுகின்றன; ஆதலின் நம் தலைவர் குறித்த நாள் இதுவே; அவரும் இன்று வருவது உறுதி; அதனால் இப்பருவம் நினது பசப்புக்குமருந்தாகும்; ஆகையால் இனி நீ வருந்தேல்!]

தலைவி:-அன்புடையாய், நீ இன்னும் எதுவேண்டுமாயினும் கூறு; இச்சொற்கள் அனைத்தும் உண்மையென்று நம்பி மயங்குபவள் யான் அல்லேன்; இதோ நமது அன்பர் வருகின்றார் என்று மேலும மேலும் பொய்யுரை பகர்ந்து என் துயரையே மிகுவிக்கின்றாய் நீ. எனதொரு அண்மைத் தோழியாகஅமைந்ததற்குக் காட்டும் அன்பு இதுவோ? தலைவரைப் பிரிந்து தனித்து வருந்தும் எனக்கு உண்மை உறவுடையார் ஒருவரில்லையோ! (என்றுகூறித் தன் கழுத்தில் இருந்த பவளமாலையைக் கைகளால் வருடியவண்ணமாய்ச் சோர்கின்றாள்.)

தோழி:—

இகழுநர் சொல்லஞ்சிச் சென்றார் வருதல்
பகழிபோ லுண்கண்ணாய் பொய்யன்மை யீண்டைப்
பவளஞ் சிதறி யவைபோலக் கோபந்
தவழுந் தகைய புறவு.

[அம்புபோன்ற, மையுண்டகண்களையுடையாய்!சிதறிய பவளம் போலக் காடுகளில் எல்லாம் இந்திரகோபம என்னும் பூச்சிகள் ஊர்கின்ற தகைமை யுடையவாயின; ஆதலான் தன்னை யடுப்பவர்க்குப் பொருள்கொடாவிடின் இகழ்வார் என்றஞ்சி வேந்தர்க்கு வினைசெய்து, பொருள்பெறப் போருக்குச் சென்ற தலைமகன் மீண்டு வருதல் பொய்யன்று, உண்மையே யாகும்.]

[தலைமகன் பிரிவால் மிகவும் மெலிந்துபோன தன் அழகிய தோள்களைப் பார்த்துத் தலைவி கண்ணீர் உதிர்க்கின்றாள்.]

தோழி:—

தொடியிட வாற்றாத் தொலைந்ததோள் நோக்கி
வடுவிடைப் போழ்ந்தகன்ற கண்ணாய் வருந்தல்
கடிதிடி வான முரறும் நெடுவிடைச்
சென்றாரை நீடன்மி னென்று.

[மாவடுவின் நடுவே பிளந்தாற்போன்ற அகன்ற கண்களையுடையாய்! கடுமையாய் இடிக்கும் மேகம், நம்மைப் பிரிந்து நெடியவழிச் சென்றவரைக் காலந்தாழாது மீள்வீரென்று சொல்லி முழங்காநின்றது! ஆதலின் வளையிடுவதற்கு ஆற்றாததாய் மிக மெலிந்த உன்தோள்களை நோக்கி வருந்தாதே]

நச்சியார்க் கீதலும் நண்ணார்த் தெறுதலும்
தற்செய்வான் சென்றார்த் தருஉந் தளரியலாய்
பொச்சாப் பிலாத புகழ்வேள்வித் தீப்போல
எச்சாரு மின்னு மழை.

[தலைவரது பிரிவாற்றாமல் மனம் தளரும் இயல்பினையுடையாய்! தம்மை விரும்பி வந்தவர்க்கு அளித்தலினாலும், தம்மையடையாத பகைவரை அழித்தலினாலும் தமது பிறவிக்குற்ற பயனை நிலைபெறுத்திக்கொள்ளும்பொருட்டு, பொருள்வேண்டிப் போருக்குச் சென்றவரை, குற்றமில்லாத புகழையுடைய வேள்வித்தீப்போல, ஆகாயத்தின் எல்லாப் பக்கங்களிலிருந்தும் மின்னுகின்ற மேகம் நம்பால் கொண்டுவரும.]

மண்ணியன் ஞாலத்து மன்னும் புகழ்வேண்டிப்
பெண்ணியல் நல்லாய் பிரிந்தார் வரல்கூறும்
கண்ணிய லஞ்சனந் தோய்ந்தபோற் காயாவும்
நுண்ணரும் பூழ்த்த புறவு.

[பெண்ணியல்பினையும் நற்குணங்களையும் உடையாய்! நீ உனது ஏழைத் தோழி கூறுவதை நம்பாவிடினும், இக்காடுகள் கூறுவனவற்றையாவது நம்புதல் வேண்டும்; மண்ணால் ஆகிய இந்த உலகத்து நிலைபெற்றபுகழை விரும்பிப்போரின்பொருட்டுப் போயினார் வருகையை, கண்ணிற் கிடுவதற்காக இயற்றப்படும் மையில் முழுகினவைபோலக் காயாஞ்செடிகளும நுண்ணிய அரும்புகள் மலர்ந்திருக்கின்ற காடுகள் கூறும்!]

கருவிளை கண்மலர்போற் பூத்தன கார்க்கேற்
றெரிவனப் புற்றன தோன்றி—வரிவளை
முன்கை யிறப்பத் துறந்தார் வரல்கூறும்
இன்சொற் பலவு முரைத்து.

[நங்காய், நமது அன்பர்முன் தமது பிரிவை நம்மிடத்து உணர்த்தியஅளவில் அதற்காற்றாமல் வரியையுடையவளையல்கள் முன்கையினின்றும் கழன்றுவிழ, அஃதறிந்தும் நமக்கு ஆறுதலாக இனிய மொழிகள் பலவும் கூறிப் பிரிந்துசென்றார்; அங்ஙனம் சென்றவரது வருகையைக் காடுகள்மட்டுமா கூறுகின்றன? கண்ணைப்போல மலர்ந்த இந்தக் கருவிளைக்கணம் பூக்களும், கார்காலத்து மலரும் நெருப்பைப்போன்ற சிவந்த நிறமுடைய தோன்றிப் பூக்களும் கூட அல்லவா அறிவிக்கின்றன!]

வானேறு வானத் துரற வயமுரண்
ஆனேற் றொருத்த லதனோ டெதிர்செறுப்பக்
கான்யாற் றொலியிற் கடுமான்றே ரென்றோழி
மேனி தளிர்ப்ப வரும்.

[எனது அருமைத் தோழியே! இடியேறு மேகத்தினின்று முழங்கவும், வலிமையும் மாறுபாட்டையும் உடைய எருமைக்கடா அவ்விடியொலியோடு எதிரிட்டுக் கோபிக்கும் இந்நாளில், நினது மேனி தளிர்ப்ப, விரைந்த செலவினையுடைய குதிரை பூட்டப்பட்ட நம் காதலர் தேர் காட்டாற்றினது ஓசையைப்போல ஒலியெழுப்பி இதோ வாராநின்றது.]

தலைவி.—தோழி, நீ கார்காலத்தின் இயல்பையெல்லாம் நன்கறிந்தவள் என்பதை யான் தெரிந்துளேன். மேகம் மின்னி இடித்து மழைபெய்வதும் அப்பொழுது இந்திரகோபம் என்னும் பூச்சிகள் ஊர்வதும்; காயாவும் கருவிளமும் தோன்றியும் மலர்வதுவும், மின்னொலியும் ஆனேற்றொலியும் கான்யாற்றொலியும் பிறவும் கேட்பதும் உன்னைப்போலவே யானும் அறிந்துள்ளேன்; இவையன்றி தேரொலியென ஒன்று கூறினையே, அது புதிது, யான் கேட்டிலேன்; இதற்கு முன்னர் அறிந்துவைத்ததை மனத்துட்கொண்டு,கார்காலமல்லாத இதனைக் கார்க்கால மென்றும், எளிய வென்

மனத்துடிப்பைத் தேரோவியென்றும் கூறுகின்றனை போலும்! நன்று உன் மொழிகள்!

தோழி:—

புணர்தரு செல்வம் தருபாக்குச் சென்றார்
வணரொலி யைம்பாலாய் வல்வருதல் கூறும்
அணர்த்தெழு பாம்பின் தலைபோற் புணர்கோடல்
பூங்குலை யீன்ற புறவு.

[செல்வி, நீ அறிவு தடுமாறியிருக்கின்றாய்; காடுகள், மேனோக்கியெழும் பாம்பினது படம்போலப் பூங்கொத்துக்களையுடையனவாய், ஒன்றோடொன்று பொருந்திய வெண்காந்தள் மலர்களை மிகுதியும் பெற்றிருத்தலால் நமது அன்பர் விரைவில் வருதலைக்கூறும்; கடைகுழன்று தழைத்த கூந்தலையுடையாய், நமதுஅன்பர் நம்மீது வெறுப்புற்றுச் சென்றாரல்லர்; நமக்கும் நம்மைச் சேர்ந்தார்க்கும் இம்மை மறுமைப்பயன்களை யடைவிக்க வேண்டிப் பொருளீட்டச் சென்றுள்ளார்; ஆதலின் அவர் வருகையில் ஐயம் வேண்டா.]

மையெழி லுண்கண் மயிலன்ன சாயலாய்
ஐயந்தீர் காட்சி யவர்வருதல் திண்ணிதாம்
நெய்யணி குஞ்சரம் போல வருங்கொண்மூ
வைகலு மேரும் வலம்.

[மைதீட்டிய அழகிய கண்களையும், மயில்போன்ற சாயலினையும் உடையாய், எண்ணெய் பூசப்பட்ட யானைபோலக் கருமையும்பளபளப்பும் உடையமேகங்கள்நாடோறும் வலமாக எழுவதை யறிந்தாவது என் உரையை நம்பு; மேகம் இங்ஙனம் வலமாக எழுதல் நன்னிமித்தமன்றோ? இதையும்நீ மறுப்பினும், நமது தலைவர் குற்றம் நீங்கிய அறிவினையுடையார்; அத்தகையவர் கார்ப்பருவம் வந்தும், நமது துன்பம் அறிந்தும் வாராதிரார்.]

செல்வம் தரவேண்டிச் சென்றநங் காதலர்
வல்லே வருதல் தெளிந்தாம் வயங்கிழாய்
முல்லை யிலங்கெயி றீன நறுந்தண்கார்
மெல்ல வினிய நகும்.

[விளங்குகின்ற ஆபரணங்களையுடையாய், பொருள் வேண்டிப்போனநம்காதலர் விரைவில் வருவாரென உறுதியாய் அறிந்தோம்; ஏனெனின், இதோ முல்லைச்செடிகள் நினது அழகிய பற்களைப்போன்று அரும்புகளை ஈனுகின்றன! முகிலோ மெதுவாகவும் இனிமையாகவும் மின்னுகின்றது.]

தலைவி:—தோழி, நீ இப்பொழுது காட்டிய செய்தியோ உண்மை! மற்று, அதற்கு நீ கூறிய பொருள்தான் பொருந்தாது. யானும் சிறிது தெரிந்தவள் அல்லளோ? என்மீது அன்புவைத்து இன்னும் வாராத தலைவரை நினைந்து எளியேன் வருந்தும் பேதைமையைக் கண்டு முல்லைச் செடிகள் பற்களைக்காட்டிப் பரிகசிக்கின்றன; மேகம் மெல்ல நகுகின்றது. இதுதான் உண்மை. நீயே உண்மையைக் கூறிப் பின் மறைக்க முயல்கின்றாய்.

தோழி:—

திருந்திழாய் காதலர் தீர்குவ ரல்லர்
குருந்தின் குவியிண ருள்ளுறை யாகத்
திருந்தி னிளிவண்டு பாட விருந்தும்பி
இன்குழ லூதும் பொழுது.

[திருத்தமான அணிகளையுடையாய், என்னிலுங் கற்றவள் நீயே; அதனால்தான் எனது மொழியில் யான் எதிர்பாராத பொருள் கூறுகிறாய்; அஃதிருக்கட்டும், நமது தலைவர் நம்மை மறப்பாரல்லர்; ஒருகால் வினைவயின் மறந்து முல்லையையும் மின்னலையும் பாராதொழியினும், குருந்தினது குவிந்த பூங்கொத்துக்களின் உள்ளிடமே இருப்பிடமாக, திருத்தயாக இளியெனும் பண்ணை வண்டுகள் பாட வேறு ஒருவகைக் கரியவண்டுகள் குழல்ஒலிபோல் ஊதும் பொழுது, அவ்வொலி கேட்டாவது நமது நினைவுபெற்று வாராதிரார்.]

அறைக்க லிறுவரைமேற் பாம்பு சவட்டிப்
பறைக்குர லேறொடு பௌவம் பருகி
உறைத்திருள் கூர்ந்தன்று வானம் பிறைத்தகை
கொண்டன்று பேதை நுதல்.

[மடமைக்குணமுடையாய், இதோ பார்! மூங்கில்கள் நீரைப்பருகி, பறையினது ஒலியைப்போன்று ஓசையுடைய இடியால் பாம்புகளை வருத்திப் பாறைக் கற்களையுடைய பக்கமலைகளின்மேல் மழைபெய்து இருள் மிக்கது! இதனைக்கண்டேனும இது கார்காலத் தொடக்கம் என்பதையறிந்து, அதனால், தலைவர் வரும் நாள் இது என உறுதியாய் நம்பு; ஆ! என்ன! பொலிவிழந்திருந்த உன் நெற்றி பிறைத்திங்களின் அழகைக் கொண்டதே.]

கல்பயில் கானம் கடந்தார் வரவாங்கே
நல்லிசை யேறொடு வானம் நடுநிற்பச்
செல்வர் மனம்போல் கவினீன்ற நல்கூர்ந்தார்
மேனிபோற் புல்லென்ற காடு.

[நங்காய்! இது கார்காலம் அன்று என்றோ நினைக்கின்றாய்? மலைநெருங்கிய காட்டைக் கடந்துசென்ற நம் தலைவர் வரும்வகை, அப்பொழுதே மேகம் மிக்க ஓசையையுடைய இடியுடனே எங்கும் பெய்யத் தொடங்கிவிட்டது; அதனால், வறுமையால் மெலிந்தோரின் உடல்போலப் பொலிவிழந்திருந்த காடுகள் செல்வம் நிறைந்தோரின் உளம்போல் அழகைத் தருகின்றன] எனவே நம் காதலர் இனி ஒருக்கணமும் அங்குத் தாமதியார்.]

கலித்தொகை

முகவுரை

முன்னாள் நங் தமிழ்மொழியை வளர்த்த அறிவு சான்ற புலவர்கள் இயற்றிய நூற்கள் பல. அவற்றுள் சொற்சுவை பொருட்சுவை நிறைந்து அறம், பொருள், இன்பம் பயப்பனவாகிய் இலக்கிய நூற்களை, பெரியோர், பத்துப்பாட்டு எட்டுத்தொகை பதினெண் கீழ்க்கணக்கு, என முப்பிரி வாக்கினர். 'கல்வி வல்லார் கண்ட கலி' எனவும், 'கற்றறிந்தார் சொல்லுங் கலி' எனவும், 'கற்றறிந்தார் ஏத்துங் கலி' எனவும் பலவாறு போற்றப்பெற்றதும், அகப்பொருளுக்குத் தலைசிறந்த இலக்கியமாய் அமைந்ததும், நூற்றைம்பது கலிப்பாக்களினால் இயற்றப் பெற்றதுமாகிய கலித்தொகை அவ் வெட்டுத்தொகை நூற்களுள் ஒன்று. இது கலிப்பாவால் தொகுக்கப்பட்டதாகலின், கலித்தொகை என்னும் பெயர் பெற்றது.

இந்நூலின் கடவுள்வாழ்த்தும் நெய்தற்கலியும் நல்லந்துவனாரும், பாலைக்கலி சேரமான் கடுங்கோவாலும், குறிஞ்சிக்கலி கபிலனாரும், மருதக்கலி

மதுரை மருதன் இளநாகனுராலும், முல்லைக்கலி சோழர் நல்லுருத்திரனுராலும் இயற்றப்பட்டன என்பர்.

நிலத்தினை, குறிஞ்சி பாலை முல்லை மருதம் நெய்தல் என ஐந்து பகுதிகளாகப் பிரித்து, அந்தந்த நிலத்தின் மக்கள் ஒழுக்கத்தினை அந்தந்த நிலப்பெயர் கொண்டு முறையே குறிஞ்சித்திணை, பாலைத்திணை, முல்லைத்திணை, மருதத்திணை, நெய்தற்றிணை எனப் பெயரிட்டு வழங்கி, ஒவ்வொரு திணையிலும் தாம் கூறவெண்ணிய விஷயங்களை முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்னும் முறைபற்றிக் கூறினர் முன்னையோர்.

1. குறிஞ்சித் திணை

நிலமுதற் பொருள்—மலை, மலை சார்ந்த இடம்.

கால முதற்பொருள்—கூதிர்க்காலம், முன்பனிக் காலம், இடை யாமம்.

கருப்பொருள்:—

தெய்வம்:—முருகக் கடவுள். மக்கள்:—குறவர், குறத்தியர்; தலைவன்:—வெற்பன். ஊர்:—சிறுகுடி, குறிச்சி. விலங்கு:—கரடி புலி, யானை, பன்றி, கவரி. பக்ஷி:—கிளி, மயில். மரம்:—வேங்கை, குறிஞ்சி, ஆரம் (கடப்பமரம், சந்தனமரம்), தேக்கு, அகில், அசோகம், நாகம் (சுரபுன்னை), மூங்கில். கொடி:—காந்தள், சுனைக்குவளை. தானியம்:—ஐவனம் (மலை நெல்), மூங்கில் நெல், ஏனல் (செந்தினை, பைந்தினை). வாத்தியம்:—தொண்டகம், முருகியம் (சிறு பறை) குறிஞ்சியாழ். பண்:—குறிஞ்சி. வினை:—வெறியாட்டு (முருகக் கடவுளின் எதிரில்,பெண்கள் தாம் நினைத்த காரியம் முடியும்பொருட்டு வேலனேடு வள்ளிநாயகியின் வேடங்கொண்டு ஆடும்கூத்து). ஐவனம் விதைத்தல், பைந்தினை காத்தல், செந்தேன் அழித்தல், கிழங்கு அகழ்தல், அருவியாடல், சுனையாடல். நீர்:—அருவி, சுனை.

உரிப்பொருள்:—புணர்தல், புணர்தலின் நிமித்தம்.

2. பாலைத் திணை

பாலையாவது பெரும்பாலும் முல்லையும் குறிஞ்சியும் தம் தன்மையில் திரிந்து நீரின்றித் துயர்செய்வது.

நிலமுதற் பொருள்—பாலை, பாலை சார்ந்த இடம்.

கால முதற்பொருள்—வேனிற்காலம், பின்பனிக் காலம், நண்பகல்.

கருப்பொருள்:—

தெய்வம்:—துர்க்கை. மக்கள்:—எயினர், எயிற்றியர், மறவர், மறத்தியர்; தலைவன்—விடலை. ஊர்:—குறும்பு. விலங்கு:—வலியழிந்த யானை, புலி, செந்நாய். பக்ஷி:—புறு, பருந்து, கழுகு, எருமை, கருங்காக்கை. மரம்:—வற்றிய இருப்பை, குரா,மரா,பாதிரி. கொடி:—உழிஞை, பாலை. வாத்தியம்:—சூறை கோட்பறை, நிரைகோட் பறை, பாலையாழ். பண்:—பாலை வினை:—ஆறலைத்தல், சூறையாடல்.

உரிப்பொருள்:—பிரிதல், பிரிதலின் நிமித்தம்.

3. முல்லைத் திணை

நில முதற்பொருள்:—காடு, காடுசார்ந்த இடம்.

கால முதற்பொருள்:—கார்காலம், மாலை.

கருப்பொருள்:—தெய்வம்:—நெடுமால், காமன். மக்கள்:—இடையர், இடைச்சியர்; ஆயர், ஆய்ச்சியர். தலைவன்:—குறும்பொறை நாடன். ஊர்:—பாடி, சேரி, பள்ளி. விலங்கு:—மான், புல்வாய், முயல். பக்ஷி:—காடை, கவுதாரி, கானக்கோழி. மரம்:—பிடவு, கொன்றை, குருந்தம், காயா. செடி:—குல்லை, (துளசி) கொடி:—முல்லை. தானியம்:—சாமை, வாகு, முதிரை (அவரை முதலியன). வாத்தியம்:—ஏறுகோட்பறை, முல்லையாழ். பண்:—முல்லை. வினை:—வாகு முதலியன விதைத்தல், களைகட்டல், அரிதல், கடாவிடுதல், கொன்றைத் தீங்குழ லூதல், முவினம் மேய்த்தல், சேவினம் தழுவல் (எருது தழுவல்), குரவைக் கூத்தாடல், கான்யாறாடல். நீர்:—குறுஞ்சுனை, கான்யாறு.

உரிப்பொருள்:—இருத்தல், இருத்தலின் நிமித்தம்.

4. மருதத் திணை

நில முதற்பொருள்:—வயல், வயல் சார்ந்த இடம்.

கால முதற்பொருள்:—ஆறு காலம், (கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில, முதுவேனில்) வைகறை, விடியல்.

கருப்பொருள்:—

தெய்வம்:—இந்திரன். மக்கள்:—உழவர், உழத்தியர்; கடையர், கடைச்சியர்; தலைவன்:—ஊரன். ஊர்:—ஊர். விலங்கு:—எருமை, நீர்நாய். பக்ஷி:—நாரை, வண்டானம் (கொய்யடி நாரை), அன்னம், போதா (பெருநாரை), கம்புள் (சம்பங்கோழி), வானம்பாடி, குருகு, தாரா. மீன்:—வாளை, வரால், ஆரல், அயிரை, கெடிறு, கயல். மரம்:—காஞ்சி, வஞ்சி, மருதம், கொடி:—தாமரை, கழுநீர், குவளை தானியம்:—செந்நெல், வெண்ணெல் வாத்தியம்:—நெல்லரிகிணை, முழவம் (பறைப்பொது), மருதயாழ். பண்:—மருதம். வினை:—விழாக்கோள், வயல் களைகட்டல், அரிதல், கடா விடுதல், குளம் குடைதல், வருபுனலாடல். நீர்:—ஆறு, மனைக்கிணறு, குளம், பொய்கை.

உரிப்பொருள்:—ஊடல், ஊடலின் நிமித்தம்.

5. நெய்தற்றிணை

நில முதற்பொருள்:—கடல், கடல்சார்ந்த இடம்.

கால முதற்பொருள்:—ஆறுகாலம், எற்பாடு.

கருப்பொருள்:—

தெய்வம்:—வருணன். மக்கள்:—நுளையர், நுளைச்சியர்; பரதர், பரத்தியர்; அளவர், அளத்தியர்; தலைவன் - சேர்ப்பன். ஊர்:—பாக்கம், பட்டினம். விலங்கு:—உமண், பகடு, முதலை. பக்ஷி:—கடற்காக்கை, அன்றில். மீன்:—சுறு. மரம்:—புன்னை, ஞாழல். செடி:—நெய்தல், கைதை (தாழை) கொடி:—கண்டகம் (நீர் முள்ளி), அடம்பு. வாத்தியம்:—நெய்தற்பறை, மீன்கோட் பறை, நெய்தல் யாழ். பண்: நெய்தற்பண். வினை:—மீன்படுத்தல், உப்பு உண்டாக்கல். அவற்றை விற்றல், மீன்உலர்த்தல், பறவையோட்டல், கடலாடல். நீர்:—மணற்கேணி (கிணறு), உவர்க்குழி.

உரிப்பொருள்:—இரங்கல்,இரங்கலின் நிமித்தம்.

ஆசிரியர் நல்லந்துவனுர் தாம் தொகுத்த முறையில் பாலைத்திணையை முதலில் வைத்திருக்கின்றார். இதற்குக் காரணம், குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் எனப்படும் நான்கு நிலங்களுள் எது திரியினும் பாலையாகும் என்னும் நியதியே என்பர்.

இந்நூலுக்கு ஆசிரியர் நச்சினார்க்கினியர் இயற்றிய பொழிப்புரை பொன்று உண்டு.

இந்நூலுள் கூறப்பெறும் நிகழ்ச்சிகள் யாவும் உண்மையெனக்கொண்டு அக்காலப் பழக்கவழக்கங்களை

ஆராயப்புகுதல் வீண் காலப்போக்கே. ஏனெனில், இல்லது இனியது நல்லதென நிறுத்திப் புலவர் இயற்றிய நூல்களுள் இஃது இல்லதின்பாற் படும்.

"காட்சி என்பது தலைமகன் தலைமகளைக் காண்டல். தலைமகன் என்றும் தலைமகளென்றும் கூறிய இவர் யாரெனின், இல்லது இனியது நல்லது என்று புலவர் நாட்டிக் கூறப்பட்ட மூன்றனுள் இல்லதாகிய புணர்ச்சியையாற் றோன்றினாரெனக. இவரது இலக்கணம் யாதோவெனின், பிணிமூப்பு இறப்புக்களின்றி எஞ்ஞான்றும் ஒருதன்மையராய உருவுந் திருவும் பருவமும் குலனும் குணனும் அன்பு முதலியவற்றால் தம்முள் ஒப்புமையராய்ப் பொருவிறந்தாரென்ப," என்றார் பிறரும்.

நிகழக்கூடாத தொன்றை நிகழ்கின்றதாகக் கூறி மக்கள்மனத்தைப் பண்படுத்தி உயர்த்துவது கவிச் சக்கரவர்த்திகளின் இயற்கை. அன்னோர்க்கு உதவியாகவே அகப்பொருள் உறுப்புக்கள் தோன்றின.

கலித்தொகையாகிய இந்நூல், பலதிறப்பட்ட ஓசைநயத்தால் இன்பச்சுவையை மக்கட்கு ஊட்டுதற்கென்றே எழுந்த கலிப்பாவினால் முற்றும் இயற்றப்பட்டமையாலும், மக்கள் மனத்தைப் பண்படுத்தற்கேற்ற அகப்பொருள்பற்றி வருதலாலும், எண்வகை வனப்புள் அழகென்னும் வனப்பைக்கொண்டு விளங்குவதாலும், அறிவுடை மக்களால் பெரிதும் போற்றப்பட்டுவருகின்றது.

கடவுள் வாழ்த்து

முன்னிலைப் பரவல்

ஆறறி யந்தணர்க் கருமறை பலபகர்ந்து
தேறுநீர் சடைக்கரந்து திரிபுரந் தீமடுத்துக்
கூறாமற் குறித்ததன்மேற் செல்லுங் கடுங்கூளி
மாறாப்போர் மணிமிடற் றெண்கையாய் கேளினி:

படுபறை பலவியம்பப் பல்லுருவம் பெயர்த்துநீ
கொடுகொட்டி யாடுங்காற் கோடுய ரகலல்குற்
கொடிபுரை நுசுப்பினாள் கொண்டசீர் தருவாளோ!

மண்டமர் பலகடந்து மதுகையா னீறணிந்து
பண்டரங்க மாடுங்காற் பணையெழி லணைமென்றோள்
வண்டரற்றுங் கூந்தலாள் வளர்தூக்குத் தருவாளோ!

கொலையுழுவைத் தோலசைஇக் கொன்றைத்தார் சுவல்புரளத்
தலையங்கை கொண்டுநீ காபால மாடுங்கால்
முலையணிந்த முறுவலாள் முற்பாணி தருவாளோ!

எனவாங்கு,

பாணியுந் தூக்குஞ் சீரு மென்றிவை
மாணிழை யரிவை காப்ப
வாணமில் பொருளெமக் கமர்ந்தனை யாடி!

(தரவு)

(வரி—1-4) ஆறு அறி அந்தணர்க்கு - ஆறு அங்கங்களையும் அறியும் பிராமணர்களுக்கு, அருமறை பல பகர்ந்து - அருமையாகிய வேதங்கள் பலவற்றையும் அருளிச்செய்து, தேறு நீர் - தெளிந்த கங்கையை, சடை கரந்து - சடையிலே அடக்கி; திரிபுரம் தீமடுத்து - முப்புரங்களில் தீயைச் செலுத்தி, கூறாமல் - வாக்கால் சொல்லப்படாமல், குறித்ததன்மேல் செல்லும் - (மனத்தால்) எண்ணுகின்ற எண்ணத்திற்கும் எட்டாமல் செல்லுகின்ற, கடுங்கூளி - விரைவினையுடைய பேயினது, மாறு போர் - தோற்றலில்லாத போரினைக் கொண்ட, மணி மிடற்று எண் கையாய் - நீல மணிபோலுங் கழுத்தையும் எட்டுக் கைகளையும் உடைய இறைவனே, இனி கேள் - இப்பொழுது (யான் கூறுவதொன்றைக்) கேள்:

கூறாமல் குறித்ததன்மேல் செல்லும் மணிமிடற்று எண் கையாய் என்றும் கடுங்கூளி மாறாப்போர் மணிமிடற்று எண் கையாய் என்றும், கூட்டுக.

ஆறு அங்கங்களாவன:—நிருத்தம், வியாகரணம், சிட்சை, சந்தசு, சோதிடம், கல்பம் என்பன.

1. நிருத்தம்:—வேதத்தின் கடின பதங்களுக்குப் பொருள் கூறும் நூல். 2. வியாகரணம்:—இலக்கண நூல். 3. சிட்சை:—பதங்களை உச்சரிக்கும் முறையினைக் கூறும் நூல். 4. சந்தசு:—செய்யுள் இலக்கணத்தைக் கூறும் நூல். 5. சோதிடம்:—ஜோதிடநூல். 6. கல்பம்:—ஆசாரம், யாகம், சடங்கு முதலியவைகளுக்கு உரிய விதிகளைக் கூறும் நூல்.

மறையாவன—இருக்கு, யஜுர், சாமம், அதர்வணம் என நான்காம்.

இருக்குவேதம்—அக்கி, வாயு முதலிய தேவர்களைத் துதிக்கும் துதிகளைக் கொண்ட நூல்.

யஜுர் வேதம்—சடங்குகள், யாகங்கள் முதலியவற்றைச் செய்வதற்கான முறைகளையும் தந்திரங்களையுங் கூறும் நூல்.

சாமவேதம்:—யாகங்களைச் செய்யும்பொழுது தேவர்களைச் சந்தோஷப்படுத்துவதற்காகவும், யாகம் செய்பவர்களைச் சந்தோஷப்படுத்துவதற்காகவும், வீணாகானத்துடன் பாடிவந்த வேத பாசுரங்களின் தொகுதியைக்கொண்ட நூல்.

அதர்வணவேதம்: — போர்க்குரிய மார்க்கங்களையும், எதிரிகளைக் கொல்லவோ, வசீகரிக்கவோ, நோய்ப்படுத்தவோ செய்யக்கூடிய மந்திரங்களையும் கூறும் நூல்.

ஆசிரியர் நச்சினார்க்கினியர், தைத்திரியம் பவுடியம் தலவகாரம் சாமவேதம் என மறை நான்கு என்பர்.

தைத்திரியம்:—கிருஷ்ணயஜுர் வேதசாகைகளில்ஒன்று. இதுவே தமிழ்நாட்டில் யஜுர் வேதமாகப் பயின்று வந்தது என்பர்.

பவுடியம்:—இருக்குவேதத்தை யுணர்த்தும் ஒரு வடமொழியின் மரூஉ என்று கூறுவர்.

தலவகாரம்:—சாமவேத சாகைகளில் ஒன்று.

[தரவு:—கலிப்பாவிற்கு உறுப்பாய் முதலில் நிற்பது.]

(தாழிசை)

(வரி. 5-7) படுபறை (நின்கையில்) ஒலிக்கின்ற பறை, பல இயம்ப - பல சப்தங்களை உண்டாக்க, பல் உருவம் பெயர்த்து - பல வடிவங்களையும் மீண்டும் நின்னிடத்தில் ஒடுக்கிக்கொண்டு, நீ கொடு கொட்டி யாடுங்கால் - நீ கொடியதாகிய கொட்டி என்னும் கூத்தை ஆடுகின்ற காலத்தில், கோடு உயர்-பக்கம் உயர்ந்த, அகல் அல்குல்-அகன்ற அல்குலினையும், கொடி புரை நுசுப்பினாள் ஓ-கொடியை யொத்த இடுப்பினையும் உடைய உமாதேவியோ, கொண்ட சீர் தருவாள் - (தாளம் முடிந்துவிடும் காலத்தினைத் தன்னிடத்தே) கொண்ட சீரைத் தருவாள்!

கொடுங்கொட்டி கொடுகொட்டி என விகாரமாயிற்று. எல்லாவற்றையும் அழித்து நின்று ஆடுதலின் கொடுங்கொட்டி என்றார். முப்புரங்கள் தீப்பற்றி எரிதலைக்கண்டு இரக்கங்கொள்ளாது கைகொட்டி ஆடிய கொடுமையை நோக்கிக் கொடுகொட்டி என்றார், என்று கூறுவாரும் உளர். இது கொட்டி எனவும்படும். இது நின்று ஆடல்.

(வரி 8-10.) மண்டு அமர் (முப்புராதிகளால் செய்யப்பட்ட) அதிகரித்த போர், பலகடந்து - பலவென்று, மதுகையால் நீறு அணிந்து - அந்த வலியாலே (அப் பகைவீரர் வெந்தவிந்த) சாம்பலை அணிந்துகொண்டு, பண்டரங்கம் ஆடுங்கால் - நீ பண்டரங்கம் என்னும் கூத்தை ஆடுகின்ற காலத்தில், பணை எழில் அணை - மூங்கிலின் எழிலை மேற்கொண்ட, மென்தோள் - மெல்லியதாகிய

தோள்களையுடைய, வண்டு அரற்றும் கூந்தலாள் ஓ-வண்டுகள் ஒலி செய்யும் கூந்தலையுடைய உமாதேவியோ, வளர் தூக்கு தருவாள் - தாளத்திடை நிகழும் காலத்தினைக்கொண்ட தூக்கைத் தருவாள்!

பாண்டரங்கம் பண்டரங்கமென விகாரமாயிற்று. சிவ பெருமான் வெண்ணீறணிந்து ஆடியதால் அக்கூத்துப் பாண்டரங்கம் என்னும் பெயர்பெற்றது என்பர். இதுவும் நின்று ஆடல்.

(வரி. 11-13.) கொலை உழுவை - கொலைத்தொழிலையுடைய புலியின், தோல் அசைஇ - தோலை உடுத்து, கொன்றை தார் - கொன்றைப் பூவால் செய்த மாலை, சுவல் புரள-தோளிலே அசைய, தலை அம்கை கொண்டு- பிரமனது தலையை அழகியகையிலேகொண்டு, நீகாபாலம் ஆடுங்கால்-நீ காபாலம் என்னும் கூத்தைஆடுங்காலத்தில், முலை அணிந்த முறுவலாள் ஓ-முல்லையரும்புகளை யொத்த பற்களை யுடைய உமாதேவியோ, முன் பாணி தருவாள் - ஒரு தாளத்தின்முதலெடுக்கும் காலத்தினையுடைய பாணியைத் தருவாள்!

சீர், தூக்கு, பாணி என்பன தாளப்பகுதிகள்.

[மேல்வந்த மூன்று தாழிசைகளும் கலிப்பாவின் இரண்டாவது உறுப்பாகும். இது பெரும்பாலும் தாழ்ந்த ஓசையை உடையதாதலின், தாழிசை என்னும் பெயர் பெற்றது. கலிப்பாவின் உறுப்புக்களில் தாழிசையே சிறந்து நிற்கும். இஃது இடைநிலைப்பாட்டு எனவும்படும். ஒரு பொருள்மேல் மூன்று அடுக்கி வரும் இவ்விடைநிலைச்செய்யுட்கள் பாடிப்பாடி மிகவும் இன்புறத்தக்கன.]

(தனிச்சொல்)

(வரி 14) என - என்று சொல்லும்படியாக, ஆங்கு - அசை.

[தனிச்சொல்—தாழிசைகளின் பின்னே வந்து நிற்கும் ஓர் உறுப்பு.]

(சுரிதகம்)

(வரி. 15-17) பாணியும் தூக்கும் சீரும் என்றிவை— (அழிசதல்தொழிலை நிகழ்த்துகின்ற காலங்களிலே) பாணி, தூக்கு, சீர் என்று சொல்லப்பட்ட இவற்றை, மாண் இழை அரிவை காப்ப ஆடி - மாட்சிமைப்பட்ட ஆபரணங்களை அணிந்த உமாதேவி காக்க ஆடி, ஆணம் இல் பொருள் எமக்கு அமர்ந்தனை - அன்பில்லாத பொருள்களாகிய எமக்காக ஒரு வடிவு கொண்டு வந்து, இவ்வுலகத்தில் தங்கினாய், (நின் திருவருள் இருந்தவாறு என்னே!)

[சுரிதகம் வெண்பாவால் அல்லது ஆசிரியப்பாவால் வரும். நேரே ஓடும் நீர் குழியாவது மேடாவது சார்ந்த இடத்தில் சுரிந்து அல்லது சுழிந்து ஓடும். அதுபோல இதுவரையிலும் கலியோசையால் நடந்த செய்யுள் வெண்பா அடிகள் அல்லது ஆசிரிய அடிகள் கொண்டு அவற்றிற்குரிய ஓசைபெற்றுச் சுரிந்து நடந்து முடிவதால் இப்பெயர் பெற்றது என்பர் சிலர்.]

யாப்பிலக்கணம்

கட்டுதல் எனப் பொருள்படும் யாப்பு என்னுந் தொழிற்பெயர், எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என்னும் உறுப்புகளமையச் செய்யப்படும் செய்யுளுக்கு ஆகுபெயராம். யாப்பு, பாட்டு, தூக்கு, தொடர்பு, செய்யுள் என்பன ஓரே பொருள் குறித்த பல பெயர்களாம். தமிழ்மொழியி லமைந்துள்ள நன்னூல் பலவும் பண்டைப் புலவர் பெருமக்களால் செய்யுள் நடையிலேயே இயற்றப்பட்டிருத்தலினால், அச்செய்யுட்களின் இயல்புணராதார் பொருளமைதியுணருந்திறம் பெறாராதலின், அச்செய்யுட் காவதோரிலக்கணத்தை முதலில் இனிதுணர வேண்டும். இது குறித்தே யாப்பிலக்கணம் முன்னர் இக் கலாநிலய 1931-வது ஆண்டு இதழ்களில் எழுதப்பட்டு வந்தது. இதுகாறும் வெளிவந்துள்ள அவ் விலக்கணப் பகுதியை மீண்டு மொருமுறை நினைவுகூர்தற்பொருட்டு இங்குச் சுருக்கமாகக் காண்போம்:

செய்யுட்கான அறுவகை யுறுப்புகளுள் எழுத்திலக்கணப் பகுதியை யாவரு முணர்வர். ஆதலின், ஏனையவற்றை ஆராய்வோம்:

[அசையும் சீரும், 4-வது வால்யூம், 2, 3, 5, 7, 8, 9 எண் இதழ்களில் விரிவாக விளக்கப்பெற்றிருக்கின்றன.]

அசை:—அசையென்பது நேரசை, நிரைஅசை என இரு வகைப்படும். குறில் தனித்தும், நெடில் தனித்தும், குறில் ஒற்றடுத்தும், நெடில் ஒற்றடுத்தும் நேரசை நான்குவகையாம். குறில் இணைந்தும், குறில் நெடிலிணைந்தும், குறில் இணைந்து ஒற்றடுத்தும், குறில் நெடிலிணைந்து ஒற்றடுத்தும் நிரையசை நான்கு வகைப்படும்.

உ - ம்:—

அ, அல், ஆ, ஆல்—நேரசை
அணி, அணில், இரு, இருல்—நிரையசை

குறிப்பு:—தனிக்குறில் சீரின் முதலில் நின்று நேரசையாகாது; எனினும், விட்டிசைத்தவழி நேரசையாகும்.

உ - ம்:—

"உண்ணான் ஒளிநிறான் ஓங்கு புகழ்செய்யான்
துன்னருங் கேளிர் துயர்களையான்—கொன்னே
வழங்கான் பொருள்காத் திருப்பானேல் அ ஆ
இழந்தானென் றெண்ணப் படும்." —நாலடியார்

(இச்செய்யுளில் அ ஆ என்பதில் அருளின்கண் குறிப்பாய் விட்டிசைத்து வந்த குற்றெழுத்து, சீரின் முதலில் நேரசையாயிற்று.

"அஅவனும் இஇவனும் உஉவனும் கூடியக்கால்
எஎவனை வெல்லார் இகல்?"

என்னுஞ் செய்யுளில் விட்டிசைத்துத் தனிக்குறில் நேரசையானமையுங் காண்க.)

சீர்:—மேற்கூறிய இருவகையசையே சிறுபான்மை தனித்தும், பெரும்பான்மை இரண்டும், மூன்றும், நான்கும் கூடியும் சீராம். அவற்றுள் தனியசையாலானது, அசைச்சீர் எனவும், ஈரசையாலானது இயற்சீர் எனவும், மூவசையாலானது உரிச்சீர் எனவும், நாலசையாலானது பொதுச்சீர் எனவும் வழங்கப்படும். இவற்றுள் நேரசைச்சீர் நாள் என்னும் வாய்பாட்டாலும், நிரையசைச்சீர் மலர் என்னும் வாய்பாட்டாலும் வழங்கப்படும். இவை பெரும்பாலும் வெண்பாவின் ஈற்றிலும், சிறுபான்மை மற்றச் செய்யுட்களிலும் வரும்.

உ - ம்:—"மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்"—(நாள்)
"கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்."—(மலர்)

இயற்சீர் என்பது ஈரசைச் சீராய், நேர்நேர், நிரைநேர், நிரைநிரை, நேர்நிரை என நான்காம். இவற்

திற்கு முறையே தேமா, புளிமா, கருவிளம், கூவிளம் என்பன உதாரண வாய்பாடுகளாம். இவை பெரும்பாலும் அகவற்பாவுக்கே யுரியனவாகி, அகவற்சீர் அல்லது ஆசிரிய வுரிச்சீர் எனவும் பெயர் பெறும்; மாச்சீர், விளங்சீர் எனவும் வழங்கும்.

உ - ம்:—குன்றக் குறவன் காதல் மடமகள்,
தேமா புளிமா தேமா கருவிளம்
வரையர மகளிர் புரையுஞ் சாயலள்;
கருவிளம் புளிமா புளிமா கூவிளம்
ஐயள்; அரும்பிய முலையள்;
தேமா கருவிளம் புளிமா
செய்ய வாயினள்; மார்பினள் சுணங்கே.
தேமா கூவிளம் கூவிளம் புளிமா.

(இவ் வகவற்பாவில் ஈரசைச்சீர் நான்கும் வந்தமை காண்க.)

உரிச்சீர் என்பது மூவசைச்சீராய், நேரீற்றுரிச்சீர், நிரையீற்றுரிச்சீர் என இரு வகையாகிய எட்டாம். இவற்றுள் நேரீற்றுரிச்சீர் நான்கும் வெண்பாவுக்குரியனவாதலின், வெண்சீர் எனவும்; நிரையீற்றுரிச்சீர் நான்கும் வஞ்சிப்பாவுக்குரியனவாதலின், வஞ்சிச்சீர் எனவும் வழங்கப்படும்.

1. வெண்சீர்: நேர்நேர்நேர், நிரைநேர்நேர், நிரைநிரைநேர், நேர்நிரைநேர் என அமையும். இவற்றிற்கு முறையே தேமாங்காய், புளிமாங்காய், கருவிளங்காய், கூவிளங்காய் என்பன உதாரண வாய்பாடுகளாம்.

உ - ம்:—

நாய்க்காற் சிறுவிரல்போல் நன்கணியர் ஆயினும்
தேமா கருவிளங்காய் கூவிளங்காய் கூவிளம்
ஈக்கால் துணையும் உதவாதார் நட்பென்னும்?
தேமா புளிமா புளிமாங்காய் தேமாங்காய்
சேய்த்தானும் சென்று கொளல்வேண்டும் செய்விளைக்கும்
தேமாங்காய் தேமா புளிமாங்காய் கூவிளங்காய்
வாய்க்கால் அனையார் தொடர்பு.
தேமா புளிமா பிறப்பு.

(வெண்பாவுரிச்சீர் நான்கும் இச்செய்யுளில் வந்தமை காண்க. இவை காய்ச்சீர் எனவும் வழங்கப்படும். குற்றியலுகரத்தால் முடியும் ஈரசைச் சீர்கள் வெண்பாவின் இறுதியில் அமைந்தால், அவற்றுள் நேர்நேர் என அமைவதைக் காசு என்னும் வாய்பாட்டாலும், நிரைநேர் என அமைவதைப் பிறப்பு என்னும் வாய்பாட்டாலும் வழங்குவர்.)

2. வஞ்சிச்சீர்: நேர்நேர்நிரை, நிரைநேர்நிரை, நிரைநிரைநிரை, நேர்நிரைநிரை என அமையும். இவற்றிற்கு முறையே தேமாங்கனி, புளிமாங்கனி, கருவிளங்கனி, கூவிளங்கனி என்பன உதாரண வாய்பாடுகளாம்.

உ-ம்:—பூந்தாமரைப் போதலமரத்
தேமாங்கனி கூவிளங்கனி
தேம்புனலிடை மீன் திரிதரும்
கூவிளங்கனி கூவிளங்கனி
வளவயலிடைக் களவயின்மகிழ்
கருவிளங்கனி கருவிளங்கனி
வினைக்கம்பலை மனைச்சிலம்பவும்
புளிமாங்கனி கருவிளங்கனி
மனைச்சிலம்பிய மணமுரசொலி
கருவிளங்கனி கருவிளங்கனி
வயற்கம்பலைக் கயலார்ப்பவும்
புளிமாங்கனி புளிமாங்கனி
நாளும்
மகிழும் மகிழ்தூங் கூரன்
புகழ்தல் ஆனாப் பெருவண் மையனே.

(வஞ்சியுரிச்சீர் நான்கும் இச்செய்யுளில் வந்தமை காண்க. இவை கனிச்சீர் எனவும் வழங்கப்படும்.)

பொதுச்சீர் பதினாறும். அவை பின் வருமாறு அமைந்து வழங்கும்:—

தேமாந்தண்பூ	தேமாந்தண்ணிழல்
புளிமாந்தண்பூ	புளிமாந்தண்ணிழல்
கருவிளந்தண்பூ	கருவிளந்தண்ணிழல்
கூவிளந்தண்பூ	கூவிளந்தண்ணிழல்
தேமாநறும்பூ	தேமாநறுநிழல்
புளிமாநறும்பூ	புளிமாநறுநிழல்
கருவிளநறும்பூ	கருவிளநறுநிழல்
கூவிளநறும்பூ	கூவிளநறுநிழல்

(இப் பொதுச்சீர்கள் செய்யுளில் அருகி வரும். செய்யுளில் இவை வரும்போது பூச்சீர் எட்டும் காய்ச்சீர் போலவும், நிழற்சீர் எட்டும் கனிச்சீர் போலவும் கொள்ளப்படும். இவை பெரும்பாலும் வஞ்சிப்பாவில் அமைந்து வரும்.)

உ - ம்:—அங்கண்வானத் தமரரசரும்
தேமாந்தண்பூ
வெங்களியானை வேல்வேந்தரும்
கூவிளந்தண்பூ
வடிவார்கூந்தல் மங்கையரும்
புளிமாந்தண்பூ
கடிமலரேந்திக் கதழ்ந்திறைஞ்சச்
கருவிளந்தண்பூ
சிங்கஞ்சுமந்த மணியணைமிசைக்
தேமாநறும்பூ
கொங்கவிரசோகின் குளிர்நிழற்கீழ்ச்
கூவிளநறும்பூ
செழுநீர்ப்பவளத் திரள்காம்பின்
புளிமாநறும்பூ
முழுமதிபுரையும் முக்குடைநீழல்
கருவிளநறும்பூ
வெங்கண்வினைப்பகை விளிவெய்தப்
தேமாநறுநிழல்
பொன்புனைநெடுமதில் புடைவளைப்ப
கூவிளநறுநிழல்
அனந்தசதுட்டய மவையெய்த
புளிமாநறுநிழல்
நனந்தலையுலகுட னவைநீங்க
கருவிளநறுநிழல்
மந்தமாருத மருங்கசைப்ப
தேமாந்தண்ணிழல்
அந்தரதுந்துபி நின்றியம்ப
கூவிளந்தண்ணிழல்
இலங்குசாமரை எழுந்தலமர
புளிமாந்தண்ணிழல்
கலங்கிளர்பூமழை கனிசொரிதா
கருவிளந்தண்ணிழல்
இனிதிருந்
தருநெறி நடாத்திய ஆதிதன்
திருவடி பரவுதும் சித்திபெறற் பொருட்டே.

குறிப்பு:—இச்செய்யுளில் 11-ஆம்அடியிலுள்ள அனந்த

சதுட்டயம் என்னும் சீரையும், 13-ஆம் அடியிலுள்ள மந்தமாநதம் என்னும் சீரையும், 15-ஆம் அடியிலுள்ள இலங்குசாமரை என்னும் சீரையும் கவனிக்க. இவை அசை யமைதிக் கேற்ப நோக்கின். முன்னது நிரை நிரை நேர் நிரை எனவும், பின்னது நேர் நிரை நிரை யெனவும், மற்றது நிரை நிரை நிரை எனவும் அமைந்து, முறையே கருவிளந்தண்ணிழல், கூவிளங்கனி, கருவிளங்கனியென வாய்பாடு கூறப்படும். ஆனால், யாப்பருங்கலக் காரிகை யுரையாசிரியர், "இச்செய்யுளில் நாலசைச்சீர பதினாறும் அடிதோறும் முதற்கண்ணே வந்தவாறுகண்டு கொள்க," எனக் கூறி யிருக்கின்றனர். ஆதலின், அவர் கருத்தின் படி முன்னது புளிமாநறுநிழல் எனவும், பின்னது தேமாந் தண்ணிழல் எனவும், மற்றது புளிமாந்தண்ணிழல் எனவும் கொள்ளப்படாவாயின், அவர் சொல்லுக்கு முரணேற்படும். ஆகையால், இவற்றை அனந் + த + சதுட் + டயம்எனவும், மந் + த + மா + நதம் எனவும், இலங் + கு + சா + மரை எனவும் நிறுத்தி வாய்பாட்டமைத்தல் வேண்டும். முதற்சீரிரண்டிலும் த என்னும் எழுத்து ஒலியில் பிரிந்திசைத்தலின், இங்ஙனம் ஆயிற்று என்று கொள்ளல் வேண்டும். எனினும், இங்ஙனம் தனிக்குறில்சீரிடையில் நின்று பிரிந்திசைத்தவழி நேரசையாகு மென்பதற்குக் காரிகையிலேனும் விருத்தியிலேனும் விதிபெறுவதற்கில்லை. குற்றியலுகரம் வந்து பிரிந்திசைக்கும்போது நேரசையாதற்கு விதியுண்டு.

காற்று மழை

Shakespeare—"The Tempest"

முன்னுரை

"இவ் விந்தியநாட்டுப் பேரரசு நமக்கு இருப்பினும் இருக்கட்டும், இல்லாமலொழியினும் ஒழியட்டும், அது ஒரு பொருளில்லை. மற்று, ஷேக்ஸ்பியர் இல்லாமலோ நாம ஒருநாளும் வாழமாட்டோம். இந்தியப் பேரரசோ ஒருநாள் நம் கைகடந்து போய்விடும், இந்த ஷேக்ஸ்பியரோ என்றென்றும் நம்முடன் இருத்தல் வேண்டும்" என்று எண்பதாண்டுகளுக்கு முன், ஆங்கிலப் பெருந்தகை தாமஸ் கார்லைல் என்பவர், மன்னுயிர்க்கு ஷேக்ஸ்பியரின் இன்றியமையாமையை ஓகையுடன் விளம்பலுற்றார். அன்னதோர் உயர்பெருங் கவிவரர் அருளிய நாடகங்கள், ஆங்கிலமறியாக் குறையினால் மட்டுமே, எட்டாக் கனிகளாய்க் கழியாவண்ணம் காக்க வேண்டுவது இக் கலாநிலயத்தின் கடனெனத் துணிந்து, சென்ற ஆண்டு, ஜூலியஸ் ஸீஸர் என்னும் துன்பியல் நாடகத்தை மொழிபெயர்த்துத் தந்து, பொருள் விளங்கக் குறிப்புரைகளும் நயந்தெரிய ஆராய்ச்சியுரைகளும் இவ்விதழ்களில் வரைந்து வெளியிட்டோம்.

இம்முறையிலேயே இவ்வாண்டில் யாம் எழுதத் துவக்கியிருக்கின்ற "காற்று மழை" என்னும் இந் நாடகம் (The Tempest) ஷேக்ஸ்பியர் தம் கலையும் மனமும் முதிர்ந்த பருவத்தில் எழுதியதும் இன்னியல் முடிவு வாய்ந்ததும் ஆய வொன்று. இதன் கலைநலக்கட்டும் காவியச் செறிவும் தூய்மைச் சிறப்பும், ஓதுவோர் உள்ளங்களைக் கவர்ந்துகொண்டு உவகையோடு உயர்த்தவல்ல மேன்மையால் திகழ்கின்றன.

அங்கம் 1. களம் 1.

இடம்:—கடுங்காற்றால் அலைப்புண்ட கடல் நடுவே ஓர் மரக்கலம்.

[மீகாமன் வருகின்றான்] (1)

மீகாமன்:—இதையாள! (2) (கூப்பிடுகின்றான்)

இதையாளன்:—இதோ, ஐய, என்ன செய்தி? (3)

மீகாமன்:—நன்று (4). நாவாய் ஆள்களுக்குச் சொல்: (5) உடனே இதற்கு விரைந்து விழுக (6). இல்லையேல், நாம் தரைபாய்ந்து விடுவோம். (7) ஆகட்டும் ஆகட்டும்! (8) [போகின்றான்]

[நாவாயாள்கள் வருகின்றனர்]

இதையாளன்:—ஹே! என் கண்களே! உற்சாகமாக, உற்சாகமாகச் செய்யுங்கள், என் கண்களே! ஆகட்டும் ஆகட்டும்! மேற்பாயை இறக்குங்கள். மீகாமன் குரலைக் கவனியுங்கள். இடம் மட்டும் இருக்குமாயின், நீ உன் மூச்சுடையும்மட்டும் அடித்துத் தீர்க்கலாம் (9)

[அலான்ஸோ, ஸபாஸ்ட்டியன், பர்டினண்ட், கன்ஸாலோ, அண்டோனியோ, மற்றுஞ் சிலர் வருகின்றனர்] (10)

அலான்ஸோ:-அப்பா, இதையாளா, சாக்கிரதை. மீகாமன் எங்குளான்? ஆண்பிள்ளைகளாயிருங்கள் (11).

இதையாளன்:—வேண்டிக்கொள்கின்றேன், கீழே இருங்கள். (12)

அண்டோனியோ::-இதையாள, மீகாமன் எங்குளான்?

இதையாளன்:—அவன் குரல் கேட்கவில்லையா உங்களுக்கு? எங்கள் காரியத்தைக் கெடுக்கின்றீர் : உங்

இந்நாடகம், நடுக்கடலில் காற்றுமழையில் அகப்பட்டு அலைப்புறுகின்ற ஒருமரக்கலத்தினுள்ளே துவக்குகின்றது.

(1) மீகாமன் - மாலுமி—கப்பலோட்டும் அதிகாரி. இவன் இதையாளனைக் கூப்பிட்டுக்கொண்டே கப்பலின் மேல்தட்டிற்கு வருகின்றான்.

(2) இதை - கப்பலின் பாய். இதையாளன்-பாய்களை விரிப்பது இறக்குவது திருப்புவது போன்ற காரியங்களை மீகாமனுக்கு உட்பட்டுச் செய்பவன்.

(3) மீகாமன் தன்னைக் கூப்பிடுவதைக்கேட்ட இதையாளன், "இதோ, இங்கிருக்கின்றேன்" என்று சொல்லிக் கொண்டே எதிர்வருகின்றான்.

(4) நன்று - நல்லது, நீ இங்கே இருக்கின்றாயா - என்னும் குறிப்பைக் காட்டுகின்றது.

(5) நாவாய் ஆட்கள் - கப்பலில் வேலைசெய்யும் ஆள்கள்.

(6) உடனே விரைந்து விழுக - கடுங்காற்றில் அகப்பட்டிருக்கின்றோமாதலால் நாவாய் ஆள்கள் செய்யவேண்டியனவற்றை அவர்களுக்குச் சொல்லி, தாமதம் சிறிதுமில்லாமல் வேகமாகக் காரியத்தைப் பார்—என்பது பொருள். "அவசரப்பட்டுப்போய் இவன் விழுந்தடித்துச் செய்தான்", அல்லது "அவன் விழுந்தடித்து ஓடிவருகின்றான், பார்" என்பன போன்ற வழக்குக்களில் 'விழுதல்' என்பது பரபரப்பைக் குறிப்பதுபோல், "உடனே இதற்கு விழுக" என்பதும் "பரபரவென்று இக்கடுங்காற்றிலிருந்து நம் கப்பல் தப்புவதற்குச் செய்யவேண்டியவைகளைச் செய்" எனப்பொருள்படும் குறிப்பில் வந்திருக்கின்றது.

(7) தரைபாய்ந்து விடுவோம்—காற்றினால் எற்றுண்ட கப்பல் தரைதட்டி மணலில் புதைந்து உடைந்துவிடும்.

(8) ஆகட்டும் ஆகட்டும் !! என்பது விரைவுக் குறிப்பில் வழங்கும அடுக்கு.

கள் அறைகளிலேயே இருங்கள் : இக் கடுங்காற்றிற்கு நீங்கள் கைதருகின்றீர். (13)

கன்ஸாலோ:—நல்லது, இருக்கட்டும். நீ பொறுமையாயிரு.

இதையாளன் :—இக்கடலிருக்கும்போது. (14)—போங்கள்! அரசன் என்ற பேரிற்கு இப் பேரலைகள் என்னமதிப்பு வைக்கப்போகின்றன ?... உங்கள் அறைகளைச் சேருங்கள் இரைய வேண்டா! எங்களை அல்லல் செய்யாதீர்

கன்ஸாலோ:—நல்லது, இருப்பினும், இக்கப்பலில் யாரைக் கொண்டிருக்கின்றாயென்பதை நினைத்துப் பார்.

இதையாளன்:—என்னையேவிட யான் அதிகம் அன்புவைத்திருப்பவர் ஒருவரும் இலர். (15) நீயோ வோர் மந்திரி. இப் பூதங்களைச் சும்மாவிருக்கும்படி கட்டளையிட்டு இவ்வேளை அமைதியடையும் வகைசெய்வாயாயின், பிறகு நாங்கள் கயிற்றொன்றை இனிக் கையாளும் தொடாமற் போகின்றோம். (16) : உன் அதிகாரத்தைச் செலுத்திப்பார் : உன்னால் இயலாதாயின், இத்தனை காலம் நீ உயிரோ டிருந்ததற்கு வந்தனங்கள் செலுத்தி, இவ்வேளை விபரிதமாக முடியுமெனின், அதற்காளாகும் வண்ணம் உன் அறையில் ஆயத்தம்செய்துகொள் ...கண்மணிகளே, உற்சாகமாயிருங்கள்! போங்களோயா வழியைவிட்டு.

[போகின்றான்]

கன்ஸாலோ:—இந்தப் பயலைப்பற்றி எனக்குப் பெரிது நம்பிக்கை உண்டாகின்றது. முழுகுங் குறி அவன் முகத்தில் இல்லையென நினைக்கின்றேன். அவன் உருவமே ஓர் முதிர்ந்த தூக்குமரம். நல்லாய், விதியே அவனைத் தூக்கிடுந் திறத்தில் உறுதியாய் நில். அவன் தலையெழுத்துக் கயிற்றினையே எங்கள் நாவாய்க் கயிறாக்குவாய்; ஏனெனில் இந்தக் கயிறுகளோ ஒன்றும் இப்பொழுது உதவக்காணேன். தூக்கிச்சாவதற்கே இவன் பிறந்திலனாயின், எங்கள் நிலை இரங்கற்பாலதே. (17)

[போகின்றனர்]

(9) கண்களே, என்று நாவாயாள்களை அருமையாய் அழைக்கின்றான். கப்பலுக்கும் கரைக்கும் இடையே போதிய கடலிடம் மாத்திரம் இருக்குமாயின் காற்று எவ்வளவு வேகமாயடித்தாலும் தனக்குக் கவலையில்லை என்கிறான்.

(10) அலான்ஸோ - நேப்ல்ஸ் அரசன். ஸபாஸ்ட்டியன் - அலான்ஸோவின் தம்பி. பர்டினண்ட் - அலான்ஸோவின் மைந்தன். கன்ஸலோ - வயது முதிர்ந்த ஓர் மந்திரக்கிழவன். அண்டோனியோ - மிலான் எனனும் மாகாணத்திற்குத் தலைவனான ஓர் சிற்றரசன்.

(11) தைரியத்தைக் கைவிடாதீர்கள், என்பதுபொருள்.

(12) வேலையில் கவனமாயிருக்கும்போது வீண் கேள்விகள் கேட்கின்றானென்று சினந்த இதையாளன் அவர்களைக் கப்பலின் உட்புறம் இறங்கிப்போய் இருக்கச்சொல்கின்றான்.

(13) இப்படி எங்கள் வேலையைச் செய்யவிடாமல் பேச்சுக் காடுத்துக் கெடுப்பதால், இந்தக்கப்பலை உடைக்க முயல்கின்ற கடுங்காற்றுக்கு நீங்கள் உதவிசெய்பவர்கள் போல் ஆகின்றீர்—என்று கடிந்து சொல்கின்றான்.

(14) இந்தக்கடல் பொறுமையயிருக்குமானால், நானும் பொறுமையாயிருக்கலாம் எனமுடியும்.

(15) "அரசன் ஒருவன் இக்கப்பலில் இருக்கின்றான் என்பதை நினைவிற்கொண்டு நீ, அவன் உயிரிற்கு ஆபத்து நேராவண்ணம் மிகவும் கவலையுடன் இந்தக் கப்பலைக் காக்கவேண்டும்" என்று குறிப்புரைத்த கன்ஸாலோவினை இதையாளன் இப்படித் தடுத்துக் கூறுகின்றான் "என்னுடைய உயிரைவிட எனக்கு இவ்வரசன் முதல் வேறொருவர் உயிர் அருமையானதோ. கப்பல் உடைவதால் என் உயிரிற்கு ஆபத்துவரும். ஆகையால், அரசன் இருப்பதை நினையாமல் என உயிரைக் கருதியே இதனைக் காக்கவேண்டியவனா யிருக்கின்றேன் என்பதை அறியாயோ"—

(16) எங்கள் வேலையை இனிவிட்டுவிடுகின்றோம், என்று சபதம் செய்கின்றான். பூதங்கள்—காற்றும் கடலும்.

(17) தங்களை மதியாமல் கடுஞ்சொற்கள் பேசுகின்றானென்று இதையாளன்மீது கன்ஸாலோவிற்கு மிகுந்த கோபம் பிறக்கின்றது. ஆதலால் அவனை இப்படி வைகின்றான். இந்தத் துஷ்டன் ஒருநாள் தூக்குத்தண்டனையடைந்து சாகவேண்டியவன். அவனுடைய தலையெழுத்துஇது என்பது நிச்சயமாதலால் இன்று இங்கு நீரில்முழுகிச் சாகமாட்டான். அவன் தப்பினால் நாங்களும் அவனுடன் தப்பவேண்டியவர்கள். ஆகையால், விதியே, அவன் தலையெழுத்தை மாற்றிவிடாதே. இனி அவன் கழுத்தில் இறுகவேண்டிய கயிறுதான் இன்று எங்கள் கப்பலைக் கரைக்குக் கொண்டுசெலுத்திக் காக்கவேண்டிய கயிறாய் உதவவேண்டும். ஆகையால் இந்தத் துஷ்டனது தலைவிதியாலேயே நாங்கள் தப்பினாலன்றி வேறு வழியில்லை—என்கின்றான்.

நம்மாழ்வார் வைபவம்

திருவாய்மொழி

[5-வது வால்யூம் 966-வது பக்கத் தொடர்ச்சி]

4-ம் பத்து 4-ம் தசகம்
1-ம் பாசுரம்.

மண்ணை யிருந்து துழாவி
வாமனன் மண்ணிது வென்னும்
விண்ணைத் தொழுதவன் மேவும்
வைகுந்த மென்றுகை காட்டுங்
கண்ணை யுண்ணீர் மல்கநின்று
கடல்வண்ண னென்னு மன்னேயென்
பெண்ணைப் பெருமையல் செய்தார்க்
கென்செய்கேன் பெய்வளை யீரே.

அவதாரிகை :— விரகாவஸ்தையிலிருக்கின்ற ஒரு பிராட்டி தானெம்பெருமானைப்பிரிந்ததனால் பிச்சேறிச்சொல்லுகின்ற பாசுரங்களை அவளது திருத்தாயார் சொல்லி அலற்றுகிறபடி இத்தசகம்பாடப்பெற்றிருக்கின்றது. சென்ற "கோவைவாயாள்" என்கிற தசகத்தில், பகவானது சிநேக சுபாவத்தை மெச்சிப்புகழ்ந்து "நானும் அவனும் எவ்வண்ணம் ஒருநீராகக் கலந்தோமென்று சொல்ல முடியவில்லை என்று முடித்த இவர் இந்தத் தசகத்தில்மீண்டும் விரகதாபத்தை அநுபவிக்க என்ன காரணம்? பகவானுடன் சேர்ந்த அக்கலவி ஆழ்வாருக்கு நிரவதிகமாய ஆனந்தக்களிப்பை ஊட்டினதை நாம் முன் கண்டோம். இப்பெரியாரின் பிரீதியும் குதூகலமும் இவரது சுவரூபத்தை அழித்துவிட்டாலோ என்ற சங்கை பகவானுக்குத் தோன்றி அவனே, இவரது பிரீதி ஒருவாறு அநுபவித்து உள்ளடங்கும் வரையில் தான் அவருக்குத் தோன்றாமல் மறைந்து இருந்ததாகக் கொண்டாலன்றி இந்தத் தசகம் சங்கதமாகாது. இப்படிக் கொள்ள ஆதாரமுளதே. என்று

நோக்குங்கால்—முன் ஒன்றும் பத்து நாலாம் தசகமாகிய "அஞ்சிறைய மடநாராய்" என்னுந் தசகத்தில் ஆழ்வார் சிற்சில பக்ஷிகளைப் பகவானுக்குத் தூதுவிட அவன் "வளவேழுலகில்" என்னும் தசகத்தின்படி இவருக்குத் தரிசனம் கொடுத்து இவரோடு கலக்க எழுந்தருளினான். அவனைக் கண்ணுற்றதும் "அவனை அழைக்க நான் அருகனேனோ" என்று தம்மை நிந்தித்துக்கொண்டு தம் தாழ்ந்த நிலையையும் அவனது உன்னத பதவியையும் உட்கொண்டு அவனை விட்டுப் பிரிந்து ஓட இப்பெரியார் எத்தனித்தார். இவரைச் சமாதானப்படுத்தி இவரோடு கலக்கப் பகவான்செய்த முயற்சியை மீண்டும் இங்கு எடுத்தெழுத வேண்டா. அவ்விடம் கண்டுகொள்க. தன்னுடைய ஸௌசீல்யத்தையும் ஸௌலப்யத்தையும் பிதுர்வாத்ஸல்யத்தையும் பலவிதமாய் இப்பெரியாருக்கு நிரூபித்துப் பிறகு அவன் இவரோடு கலந்தான். பக்திப் பரவசத்தினால் ஆழ்வாருக்கு மனோசாஞ்சல்யம் ஏற்படக்கூடுமென்று ஆலோசித்தும் அநர்ஹதாநுஸந்தானம் மீண்டும் வரக்கூடுமென்ற பயங்கொண்டும் பகவான் சற்று மறைந்தானென்று இவ்விடத்திலும் கொள்ள வேண்டும். இதுவே பொருத்தமான ஹேதுவென்று இப்பெரியாரின் அடுத்த தசகத்தின் 5-ம் பாசுரமும் நமக்கு நிதர்சனமாகக் காட்டிக் கொடுக்கிறது. "ஆற்ற நல்வகை காட்டு மம்மானை" என்பது அப்பாசுரம். அதற்குப் பொருள்—"பக்தர்களுக்குத் தன் நல்ல குணங்களை ஏகதேசத்தில் ஒரே காலத்தில் காட்டிக் கொடுத்தால் அவர்கள் பகவானது ஆற்றலையும் நற்குணங்களையும் உள்ளபடி உணராமல் திகைத்துவிடுவார்கள்; ஆகையால், தன் குணங்களையும் மனோகரமான திவ்விய வடிவையும் கொஞ்சம்கொஞ்சமாய்ப் பக்தர்களுக்கு அவர்களுடைய அநுபவத்திற்குள் அடங்கும்படி காட்டிக்கொடுக்கிறான்—என்று கூறுகிறார்.

பொழிப்புரை:—பகவத் சம்பந்தத்தால் ஒருவாறு உஜ்ஜீவிக்கலாமென்று ஆசையுடன் நினைக்கின்ற என் மகள் பூமியைக் குறித்து, இது வாமனன் யாசித்தமண்ணென்று சொல்வாள். ஆகாயத்தைப் பார்த்து திருநாடாகக் கருதி அவன் மேவும் வைகுந்தமென்று கைகளால் காட்டுவாள். பகவானைக் காணாதவாறே கண்களில் நீர் மல்கி "கண்ணா"வென்று அழைப்பாள். இப்படி என் பெண்ணைப் பித்தேறப் பண்ணிவிட்டான் எம்பெருமான்; நான் என்ன செய்ய உளது. கைகளில் வளையல்கள் பூண்ட மகளிர்களே சொல்லுங்கோள்:—என்கிறார்.

2-ம் பாசுரம்.

பெய்வளைக் கைகளைக் கூப்பிப்
 பிரான்கி டக்குங் கடலென்னும்
செய்யதோர் நாயிற்றைக் காட்டிச்
 சிரீதரன் மூர்த்தி யீதென்னும்
நையும் கண்ணீர் மல்கநின்று
 நாரண னென்னு மன்னேயென்
தெய்வ வுருவிற் சிறுமான்
 செய்கின்ற தொன்றறி யேனே.

பதக்குறிப்புக்கள்.-மூன்றாமடியில் "அன்னே" என்பது "பெண்டிர்களே" என்று விளித்துக்கூறியபடி. தெய்வஉருவில் சிறுமான்-தேவர்கள்போல் விளங்கும் சரீரத்தையுடைய கபடமில்லாத என் அழகிய பெண். செய்யதோர் நாயிற்றைக் காட்டி - ஸூரியனையும் அதைச் சுற்றியுள்ள பிரபையையும் கண்டு இலக்குமியும் நாராயணனுமாக நினைத்துச் "சிரீதரன்" அதாவது இலக்குமியை மார்பிலுடைய ஸ்ரீநிவாஸனென்று பிரமித்துச் சொல்லுவாள், என்பது தாத்பரியம். பிரான் கிடக்கும் கடல் - க்ஷீராப்தி. இது சப்தலோகங்களுக்கு அப்பாலிருந்தாலும் இப்பிராட்டி அடுத்திருக்கிற இப்பூமியின் கடலைக் காட்டியே க்ஷீராப்தியாகப் பிரமித்து இலக்குமியையும் பகவானையும் கைகள் கூப்பித் தொழுவாள். முதல் இரண்டடிகளால், கருணைமூர்த்தியான இலக்குமியின் ஸந்நிதியில் பகவான் தனக்கு அருள்செய்வானென்பது இப்பிராட்டியின் எண்ணம். இது வாய்க்காமையால் நாராயணாவென்று கூப்பிட்டு அழுவாள். இவள் செய்யும் பிரகாரங்களை நான் அறியமாட்டேன்—என்கிறாள், அவள் தாயார்

அப்பர்

அப்பரும் அறுபத்துநான்கு கலைகளும்—30. வியாகரணம்

[5-வது வால்யூம் 945-வது பக்கத் தொடர்ச்சி]

(i) அப்பர் தேவாரத்திற்கெனத் தனி வியாகரணம் அவசியம்.

வியாகரணமென்பது ஒரு பாஷையின் இலக்கணம். பாஷைக்கு ஒரு இலக்கணம் பொதுவாய் அமைந்திருப்பினும் அவ்வப் பாஷையிற் சிறந்த இலக்கிய நூல்கள் எழுதியுள்ள ஆசிரியர்களுக்கெனப் பிரத்தியேக வியாகரணம் ஏற்படுவது மரபு. ஷேக்ஸ்பியர், மில்டன் முதலியோருக்குத் தனித்தனி யிலக்கணங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. நமது பாஷையிலும் கந்தபுராண முதற் செய்யுளான "திகடச்சக்கரச் செம்முகமைந்துளான்" என்னும் கணபதிதோத்திரத்தின் சொற்றொடரின் சந்திக்கு விதியாக வீரசோழியம் வெளிவந்ததெனின் நமது சமய குரவர்களுக்கெனப் பிரத்தியேக வியாகரண நூல் அமைவது அரிதோ? மற்றும் தொல்காப்பியனார்காலத்திற்கும்அப்பர்காலத்திற்கும் பலநூற்றாண்டுகள் இடையே நிற்கின்றன. அதனால், தொல்காப்பியனார் காலத்தில் வழங்கிய பலவிதிகள் பழையனவாய்க் கழிக்கப்பட்டும், வழங்காதன பல புதியனவாய் வடமொழியிலிருந்து ஏற்பட்டும் நமது பாஷை வளர்ந்துவந்த விஷயங்களை, நமது சமயகுரவர் பாடல்களில் காணலாம். இயற்றமிழில், யாப்பு, பல துறைகளில் விருத்தியடைந்தது. தொல்காப்பியனார் முதல் நக்கீரர்வரையில் சங்கப்புலவர்கள் கண்டிராதவிருத்தங்கள் நமது சமயகுரவர்கள் காலத்தில் தமிழில் நுழைந்தன. இசையிலும் அவ்வாறே பற்பலவகைச் சந்தங்கள் நுழைந்து தமிழ்ப்பண்களைச் சில இடங்களில் மாற்றின. இதற்கு முன்னர் வழங்கியிருந்த பண், பண்ணியல், திறம், திறத்திறம் என்னும் புராதன இசை

வகைகள் நோக்கு மிடங்களில், சம்பூரணம், ஷாடவம், ஒளடவம் என்னும் மூவகை இராகங்கள் அமைந்தன. இராகங்களின்வழி கீதங்களும் உண்டாயின. சங்கத்தார் காலத்திற்குப் பின், சிவபெருமானைத் துதிக்கப் பலர் * கீதங்கள் பாடினரென்பது மணிவாசகப் பெருமான் திருவாக்கா லறியலாம்:—

"பூதங்க டோறுநின் றாயெனி னல்லால்
போக்கிலன் வரவில னெனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுத லாடுத லல்லால்
கேட்டறி யோமுனைக் கண்டறி வாரை"

திருப்பள்ளியெழுச்சி.

நமது திருமுறைகளிலும் சிலகீதங்கள் உள. அப்பர் தேவாரத்தில் முதல்திருமுறையில் உள்ள "சொன்மாலே பயில்கின்ற குயிலினங்காள்" என்னும் பதிகமும் ஒருவகைக் கீதமே. நமது சமயகுரவர், இயற்றமிழ் யாப்பை அடிப்படையாகக் கொண்டே இசைத்தமிழ்ச் சந்தங்கள் இசையச் செய்தனர். நாடகத் தமிழும் அவ்வாறே நமது சமயாசாரியர் காலத்தில் மாறியது. ஆளுடைய வடிகள் கூறியது போல், அது

["வான நாடரும் அறியொ ணாத நீ
மறையி லீறுமுன் தொடரொ ணாதநீ
ஏனை நாடரும் அறியொ ணாதநீ
என்னை யின்னிதா யாண்டு கொண்டவா]
ஊனை நாடகம் ஆட்டு வித்தவா
உருகி நானுனைப் பருக வைத்தவா
ஞான நாடகம் ஆடுவித்தவா
நைய வையகத் துடைய விச்சையே"

திருச்சதகம் - 95

ஞான நாடகப் பாடலே, தேவாரப் பாடல்களாகக் காணப்படுகின்றன. அப்பர் நாடகத்தமிழைப் பற்றி இக்கட்டுரை (Vol 2 No 40-1929 அக்டோபர் மீ 10உயிலிருந்து ஆரம்பமாகி 743—982 பக்கம் வரையில்) விவரமாய் வரையப்பட்டிருக்கின்றது. ஆதலால் இயல் இசை நாடகமென்னும் முத்தமிழின் அடிப்படையான வியாகரணம் அப்பர் தேவாரத்திற்கெனச் சிறப்பாய் அமைந்திருக்கின்றது. அதனை ஒரு கலையாக இனிக் கட்டுரைத்து விளக்குவோம்.

அவ்வாறு அப்பருக்குரிய தனி வியாகரணத்தையெழுதுங்கால், தமிழிலுள்ள எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி யென்னும் ஐவகைப் பொது வியாகரணம் கூறாமல் விட்டிருப்பனவைகளையும், பழையன வாய்க் கால வியற்கையில் அவ்வியாகரணத்திலிருந்து கழிந்தவைகளையும், அதனோடு நூதனமாய்ச் சேர்ந்திருப்பவைகளையும், அப்பர் தேவாரங்களில் எடுத்துக் காட்டுவது இன்றியமையாததாகும். ஆகையால் அப்பர் வியாகரணக் கலையில், இலக்கண அதிகாரங்களான, எழுத்து சொல் பொருள் யாப்பு அணி என்பவற்றில் அவருக்குமுன் எழுதப்பட்ட இலக்கியத்தில் கண்டெடுக்கக்கூடாத இலக்கண விதிகளை மாத்திரம் இங்கு அவ்வதிகாரவொழுங்கில் விவரிப்போம்.

* கீதமுன் னிசைதரக் கின்னரம் வீணையர்
பூதமுன் னியல்புடைப் புனிதர் பொன்னகர்க்
கோதனம் வழிபடக் குலவு நான்மறை
வேதியர் தொழுதெழு விசய மங்கையே—சம்பந்தர்

(ii) அப்பரும் எழுத்ததிகாரமும்:—

நமது இலக்கணங்களில் எழுத்ததிகாரம் பன்னிரண்டு துறைகளில் காட்டப்படும். அவையாவன; (1) எழுத்துக்களின் எண், அதாவது வகை. (2) எழுத்துக்களின் இடுகுறி காரணப் பெயர்கள் (3) எழுத்துக்களின் முறை (4) எழுத்துக்களின் பிறப்பு, (5) எழுத்துக்களின் உருவம் (6) எழுத்துக்களின் மாத்திரை (7) எழுத்துக்களின் முதனிலை (8) எழுத்துக்களின் ஈற்று நிலை (9) எழுத்துக்களின் இடைநிலை (10) எழுத்துக்களின் போலி (11) எழுத்துக்களால் உண்டாகும் பத வகைகள் (12) எழுத்துக்களின் புணர்ச்சி, என்னும் பன்னிரண்டாம். அவற்றுள், ஒன்றுமுதல் பத்து வரையில் காட்டப்பட்ட துறைகளை எழுத்தியலென்றும், பதினொன்றாவ வதைப் பதவியலென்றும் பன்னிரண்டாவதைப் புணரியலென்றும், ஆக எழுத்ததிகாரத்தை மூவகை இயலில் நமதிலக்கணம் காட்டும். ஒவ்வொரு இயலிலும், பற்பல பகுதிகளும் உள. இவை தமிழ் மாணவர்கள் நன்குணர்ந்த விஷயங்களே.

சாதாரண இலக்கண நூல்களால் நாம் அறியக்கூடிய எழுத்ததிகார விஷயங்களுக்கும் அப்பர் முதலிய நமது சமயகுரவர்கள் இலக்கியங்களினின்று நாம் யூகித்து அறியக்கூடிய எழுத்ததிகாரத்திற்கும் அடிப்படையில் பேதம் முக்கியமாய் ஒன்றுண்டு. நமது தமிழெழுத்துச் சிவபெருமான் திருவுருவமே யென்றும், அவரது பிரணவ ஸ்வரூபமாகிய ஓங்கார தத்துவத்தின் முகங்களே பல்வகைஎழுத்தின் தாதுக்களென்றும், "ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே" என்னும் அப்பர் திருவாக்கினின்றும் அறியலாகும். தேவார பாசுரங்களில் பற்பல இடங்களில் பலவகைகளில் காட்டப்பட்டிருக்கும் நமது எழுத்தின் தத்துவங்களையெல்லாம் ஒழுங்காய்த் தொகுத்துச் சுட்டியதுபோல், தாயுமானவர் "பொருள் வணக்கம்" என்னும் பதிகத்தில் பின்வருமாறு பாடுகின்றார்.

அகரவுயி ரெழுத்தனைத்து மாகி வேறாய்
அமர்ந்ததென அகிலாண்டம் அனைத்து மாகிப்
பகர்வனவெல் லாமாகி யல்ல தாகிப்
பரமாகிச் சொல்லரிய பான்மை யாகித்
துகளறுசங் கற்பவிகற் பங்க ளெல்லாம்
தோயாத அறிவாகிச் சுத்தமாகி
நிகரில் பசுபதியான பொருளை நாடி
நெட்டுயிர்த்துப்பேரன்பால் நினைதல் செய்வாம்"

என்னும் இக்கருத்தே கொண்டு திருவள்ளுவர்

"அகர முதல வெழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு" என்றார் போலும்.

மேல்நாடு முதலிய புறச்சமயம் வழங்கும் நாடுகளின் எப்பாஷையும் தனது எழுத்தைக் கடவுள் வடிவமென்று கொண்டதில்லை. நமது சமயகுரவர்களோ,

எண்ணுமொ ரெழுத்தின் மிசையின் கிளவிதேர்வார்
கண்ணுமுத லாயகட வுட்கிடம தென்பர்;
மண்ணின்மிசை யாடிமலை யாளர்தொழு தேத்தும்
பண்ணினொலி கொண்டு பயில்கின்ற பழுவூரே

என்பது காண்க. எனவே இவ்வடிப்படை பேதத்தால், மேற்கட்ட பேதமும் சில விஷயங்களில் ஏற்படுமாகையால், அவைகளை அப்பர் தேவாரத்தில் காணுமாறு இனி ஆராய்வோம்.

வர்த்தமானம்

முடிவு அல்லலே:—மாக்கள் பலர் சூழ்ந்து நாட்டினிற்கும் மக்களுக்கு நலம்பேணும் முயற்சியெல்லாம் அந்நாட்டின் அமைதிக்குரியன அல்லவென்பதை அயர்லாந்தின் நிகழ்ச்சிகள் காட்டுவனவாகின்றன. சிறிது காலத்திற்கு முன் ஐரிஷ் குடியரசு கட்சித் தலைவரான டி. வாலரா தமது கட்சியின் வன்மையினால் ஐரிஷ் அரசாங்கத்தில் அதிகாரம் பெற்றார். அவரது தலைமையின்கீழ் இங்கிலாந்திற்கும் அயர்லாந்திற்கும் நிலவரி விஷயமான மாறுபாடு ஏற்பட இறுதியில் அது வியாபாரத்திற்குத் தீங்காய் முடிந்தது. இவ்வியாபார நிலையினால் புதுக் கிளர்ச்சியொன்று அயர்லாந்தில் சிறிது காலமாக ஏற்பட்டு வளர்ந்து வந்தது. அக்கட்சியார் டப்ளினில் சமீபத்தில்கூடித் தற்காலப் பொருளாதார நிலையில் மாறுதல் ஏற்பட்டு வியாபாரம் வளர வேண்டுமேனின் டி. வாலராவின் அரசாங்க அதிகாரம் அகலவேண்டுமென்று முடிவுசெய்தனர். அக்கட்சியார் தம் முயற்சியில் வெற்றிபெறினும் மீண்டுமொரு மாறுபாடு எழுவதும், அதன் பொருட்டு வேறு ஒரு கட்சி ஏற்படுவதும் நிகழக்கூடியவைகளே. ஐரோப்பிய நாடுகளின் அரசியற் சரிதை காட்டித்தருவது இத்தகைய அல்லலேத்தான்.

***

எதிர்நிலை விடுதலை:—டிசம்பர் மாத இறுதியில் லக்னௌவில் கூடிய அகில இந்திய மாதர் மஹாநாட்டில் பெண்விடுதலைத் தீர்மானங்கள் பல செய்யப்பெற்றன. செய்த தீர்மானங்கள் விடுதலையை உண்மையில் யாருக்கு அளிக்கின்றன வென்பதைத்தான் சிறிது கருத மறந்தனர் அம்மஹாநாட்டு மாதர்கள். ஓட்டுரிமை, பால்வேற்றுமை யில்லாத உத்தியோகவுரிமை, சொத்துரிமை ஆய பல உரிமைகளை அம்மஹாநாட்டினர் விழைந்தனர். சொத்துரிமையும், உத்தியோகவுரிமையும் மாதர்களுக் கில்லாதிருந்ததால், அவர்களைக் காக்கின்ற கடமையென்னும் தளை ஆடவர்க்கிருந்தது. அவர்களைக் காத்தளிக்கும் தொல்லைபால் மிகவும் ஆடவர் வருந்தவும் நேர்ந்தது. இத்தொல்லையினின்று ஆடவர்களை விடுவிக்கும் முயற்சியே இந்த லக்னௌ மஹாநாட்டில் நடந்துளது என்பதை அங்கு ஊக்கமோடு பேசியவர்கள் அறிய வல்லவர்களாயின் இன்னொரு மகாநாடு இனிக் கூடமாட்டார்.

***

யுனைடெட் கன்ஸர்ன்:—சென்னையில் பந்தர் தெருவிலுள்ள யுனைடட்கன்ஸர்ன் வியாபார நிலயத்தார் அனுப்பிய 1933-வது ஆண்டு காலண்டரும் டைரியும் வரப்பெற்றோம். காலண்டர் பார்வைக்கு அழகாகவிருக்கின்றது. டைரியில் ஒவ்வொருவரும் தெரிந்துகொள்ள வேண்டிய விஷயங்களெல்லாம் குறிக்கப்பெற்றிருக்கின்றன. இந்துகிறிஸ்தவ முஸல்மன் பண்டிகைநாட்களும் தபால் தந்தி நிலயக் கட்டண விகிதமும் பஞ்சாங்கமும் இதனில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. கையடக்கமான உருவத்தோடு அதிக உபயோகமுடையதாக விருக்கின்றது.

***

மயிலாசனம்:—செல்வமே போல், பாரசீக மாளிகையை நெடுங்காலம் அலங்கரித்துவந்த மயிலாசனமும் ஓரிடத்தில் நில்லாததாக விருக்கின்றது. இந்திய மன்னர்களினிடமிருந்து மகமதியர் கையில் வீழ்ந்து இறுதியில் பாரசீகம்போய்ச்சேர்ந்த அம்மயிலாசனம் இப்பொழுது பாரிஸில்,நாடிழந்துள்ள மாஜிஷாவினிடம் இருக்கின்றது. ஷாவின் வறுமை அதிகரிக்கவே அவர் இம்மயிலாசனத்தை விலைகூறுகின்றனராம்.

***

ராமநாம உபதேசம்:—புரசையில் பிக்ஷையேற்ற ஸ்ரீமத் சங்கராச்சார்ய ஸ்வாமிகள் சென்ற ஞாயிறக்கிழமை யிரவு, தம்மைக் காணவந்தோர்க்கு உபதேசம் செய்தருளினர். அப்பொழுது நமக்கு உற்றுள ஒன்றை அகற்றிக்கொள்ளவும் இல்லாதனவற்றைப் பெறவும் நாம் செய்யுமுயற்சியில் சிறிது பாகத்தையாவது கெட்டுள நமதுஆன்மாவின் பொருட்டுச் செலவிட வேண்டுமென்றும், எல்லோரும், எத்தொழிலினரும் எவ்வருணத்தாரும் தினம் 108 முறையாவது ராமநாம ஜெபம் செய்தல் வேண்டுமென்றும் கூறினர்.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்

டானிக்குகள் :

பாதாமி லேகியம் ரூ. 3-0-0
ரதிவல்லப லேகியம் 2-0-0
மஹா திராக்ஷாதி லேகியம் 2-0-0

குழந்தைகளுக்கு

ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை 0-4-0
பால சஞ்சீவினி 0-4-0
பால ஸுமிதா (டானிக்) 1-0-0

தைலங்கள்:

சந்தனாதி 6 அவுன்ஸ் ரூ. 1-0-0
அமிர்தாமலக " 0-12-0
பிருங்காமலக " 0-12-0

ஸ்திரீகளுக்கு

ஸுமிதக டானிக் 2-0-0
கர்ப்பாசய டானிக் 2-0-0
ப்ரஸவ லேகியம் 1-8-0

சுமார் 300 போலிகள் ஏமாற்றும்.
I.D.L. ச்யவனப்ராச I.D.L. பிருங்காமலக தைலம் கோரோஜனை மாத்திரை
"நஞ்சன்கூடு பல்பொடி"
சாதாரணம்-பாக்கெட் (ரிஜிஸ்தர் செய்துள்ளது) I.D.L. மெடிகேடட்-டப்பி
தயவுசெய்து கவனித்து வாங்கவும்.

I.D.L. ச்யவனப்ராச
சிறந்த டானிக்
சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு

மூலிகைகோரதசிற்றமணக்கு எண்ணெ
காஸ்ட்ராலகஸ்

ஜவரேக்
சோல் ஏஜன்ட் யுனைடெட் கன்ஸர்ன், பந்தர்தெரு

[பஸ்பங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்.] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]

— கம்ப ராமாயணம் —

பதவுரை விரிவுரை விளக்கம் இலக்கணக் குறிப்பு முதலியவைகளுடன்

வை. மு. சடகோப ராமாநுஜாசாரியார்
சே. கிருஷ்ணமாசாரியார்
வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியார்.

ஆகியவர்களால் பதிப்பிக்கப் பெற்றவை.

பால காண்டம்	ரூ.	5	0	0
அயோத்தியா காண்டம்	,,	5	0	0
ஆரணிய காண்டம்	,,	4	0	0
கிட்கிந்தா காண்டம்	,,	4	8	0
சுந்தர காண்டம்	,,	5	0	0
யுத்த காண்டம்—2 பாகம்	,,	10	0	0

தபால், அல்லது இரயில் பார்஬ல் கட்டணங்கள் வேறு. வேண்டுவோர், தாம் வேண்டும் புத்தகங்களுக்குரிய விலையில் பாதியாவது முன்பணம் அனுப்பி ஆர்டர் செய்யவேண்டும். மற்றதை வி. பி. மூலம் பெற்றுக்கொள்வோம்.

மானேஜர் :— கலா நிலயம், வேளாளர் வீதி, புரசை, சென்னை.

:: அமிர்த சாகரம் ::

தேக பலத்தையும், ஞாபகவிருத்தியையும், பும்ஸத்வத்தையும், கொடுப்பதில் எங்கள்

அமிர்தார்ணவ லேகியம்

அமிர்தசாகரம் போன்றது. மேலும், நீடித்த தலைவலி, மண்டை இடி, மார்பு வலி, தேகச் சூடு முதலிய வியாதிகளைக் கரஸ்தமாகக் கண்டிக்கும். 20-தோலா லேகியம் கொண்ட டப்பி 1-க்கு ரூபா 2.

இனம்! ஆரோக்கிய கிரந்தம் இனம்!

கேட்போருக்கு இனமாகவும், தபாற்செலவில்லாமலும் அனுப்பப்படும்.

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

கற்பக மலர் (சிறு கதைகள்)

(ஆசிரியர் - சகோதரி வி. பாலம்மாள்)

மலர் 1 - விருந்தில் விலங்கு - விலை அணா 3.
மலர் 2 - அவள் இஷ்டம் - விலை அணா 3.
ஏழணா ஸ்டாம்புக்கு 2-புத்தகங்கள் அனுப்பப்படும்.
ஸ்ரீமதீ பிரசுராலயம், மயிலாப்பூர், சென்னை.

பாரத வசனம்.

ஆதிபர்வம் 3-8-0. ஸபா, ஆரண்ய, விராட பர்வங்கள் அடங்கியது ரூபா 5-0-0. உத்தியோக; பீஷ்ம, துரோண, கர்ண சல்லிய, ஸௌப்திக பர்வங்கள் அடங்கியது 5-0-0. சாந்தி, அநுசாசனிக, அச்வமேத, ஆச்ரமவாஸ, ஸ்வர்க்காரோஹண, முசல, மஹாப்ரஸ்தானிக பர்வங்கள் அடங்கியது 5-0-0.

பாலவிநோதினி ஆபீஸ், 323, தண்டையார்ப்பேட்டை வண்ணாரப்பேட்டை போஸ்ட், மதராஸ்

NATIONAL INSURANCE COMPANY, LIMITED.

Head Office :
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

New Policies Issued in 1931 for over	Rs. 1,32,33,000
Showing an increase over the New Business figure for 1930 of	16.54 %
Claims paid up to end of 1931 over	Rs. 90,00,000
Invested Funds amount to over	Rs. 1,75,00,000

LOW RATES — LIBERAL CONDITIONS
NEW TABLES — NEW BENEFITS

For particulars & Agencies please write to:—

R. G. DAS & Co., *Managers.* OR The Branch Secretary, Madras Branch, 113, Armenian Street, Madras.

FIRE & ACCIDENT RISKS
covered by
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street; Calcutta.

The Branch Secretary, Madras Branch, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)